உன் எதிர்காலம் உன் கையில்!

சுவாமி விவேகானந்தர்

உன் எதிர்காலம் உன் கையில்!

சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

© ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
உரிமைப் பதிவு பெற்றது

VIII-5M 3C-3-2008
ISBN 81-7823-191-3

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

முன்னுரை

எதிர்காலம்! பலருக்கு இது ஒரு பெரும் கேள்விக் குறி! மாணவப் பருவத்தில் படிப்பில் கடும் போட்டி, இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதில் கடும் போட்டி, வியாபார உலகில் வியாபாரிகளுக்கிடையில் போட்டி என எந்த நிலையிலும் போட்டிகள் இருப்பதையே நாம் காண்கிறோம். இந்த கடும் போட்டிகளுக்கிடையில் எப்படி முன்னேறி வெளி வருவது என்பதே நம் முன்னால் நிற்கும் பெரும் கேள்வி. இத்தகைய சூழ்நிலையில் நம்மைச் சிறிது நினைத்துப் பார்த்தால் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் பெரும் பயம் வேறு. பல சமயம், அதிர்ஷ்டத்தையும் விதியையும் பொறுத்தே நமது எதிர்காலம் அமையும் என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்— நாம் இன்று இப்படி இருக்கக் காரணம் நமது கடந்த காலச் செயல்கள். எதிர்காலம் எப்படி

அமையும் என்பது நமது இன்றைய செயல்களைப் பொறுத்ததே. எனவே நமது இப்போதைய செயல்கள் திருத்தி அமைக்கப்பட்டால் எதிர்காலம் நம் கையிலே உள்ளது.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் நடந்து கொள்ளும் விதம் நமது எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள், பழக்கவழக்கங்களைப் பொறுத்தே அமைகின்றன. எனவே நாம் செயல்படும் விதம் நமது மனத்தைப் பொறுத்தே அமைகிறது.

'நமது மனம்' என்று நாம் கூறுகிறோம். ஆனால் மனம் நமது பேச்சைக் கேட்கவா செய்கிறது? நம் சொல்லைக் கேட்காத மனத்தை 'நமது' என்று எவ்வாறு கூற முடியும்? சுவாமி விவேகானந்தர் அழகாகக் கேட்கிறார்— சுதந்திரம்! ஒரு கணம்கூட நமது மனத்தையே கட்டுப் படுத்த முடியாத நாம் சுதந்திரம் உடையவர்களா என்ன? இருந்தாலும் நம்மை நாம் சுதந்திரமானவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். என்ன ஒரு முரண்பாடு!

நமது பேச்சைக் கேட்டு நடப்பதற்கு மனதிற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். பகவத் கீதை கூறுகிறது: 'பயிற்சி அளிக்கப்பட்ட ஒழுக்கமுடைய மனது நமது நண்பன். ஆனால் அதே மனது ஒழுக்கமில்லாத போது நமது எதிரியாக மாறிவிடுகிறது.' எனவே நமது முதல் முயற்சி மனத்தைக் கட்டுப்படுத்துவதே.

மனம் அலைபாயும் தன்மை கொண்டது. அதற்குக் காரணம் வெளிப்புறத்தை எப்போதும் சுற்றிவரும் நமது புலன்களே. அவைகளை அடக்கி, நல்ல லட்சியத்தை நினைக்கச் செய்யும்போது மனது சிறிது சிறிதாக நமது கட்டுப்பாட்டிற்குள் வருகிறது. இதனையே ஆளுமை வளர்ச்சி என்றும் கூறுகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபத்தில், எதிர்காலத்தை நாம் எவ்வாறு உருவாக்குவது என்பது சம்பந்தமாக உள்ள கருத்துக்களை ஒன்றாகத் திரட்டித் தருவதில் இது ஒரு சிறிய முயற்சியாகும். இந்த சிறிய புத்தகம் நம்முடைய

இளைஞர்களை ஊக்குவித்து, அவர்கள் மேலும் சுவாமி விவேகானந்தரின் நூல்களைப் படித்து சிறந்த ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள ஒரு தூண்டுகோலாக அமையட்டும்.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: 'ஒவ்வொருவருக்கும் அவர்களின் உண்மை இயல்பை போதியுங்கள். உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதை பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா விழிப்புற்று தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடும்போது சக்தி வரும், பெருமை வரும், நன்மை வரும், தூய்மை வரும், எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்.'

பொருளடக்கம்

முன்னுரை	iii
நமது நோக்கம்	1
நம்மை மேம்படுத்துவதன் முக்கியத்துவம்	1
நாம் உயர சில விதிமுறைகள்	7
நம்மை நாமே செதுக்கிக் கொள்ளல்	12
தெய்வீகம் மனிதனின் அடிப்படை	17
புலனின்பங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல	20
நம்மை ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்?	23
எண்ணங்களின் தாக்கம்	31
எதிர்மறை எண்ணங்களைக் கட்டுப்படுத்துதல்	37
நம்மை முதலில் மாற்றிக் கொள்வோம்	41
முழுப் பொறுப்பும் நமதே	45
எப்படி வேலை செய்வது?	51
முதலாளியைப் போல் வேலை செய்தல்	63
உலகிற்கு உதவி புரிதல்	66
வெற்றி சுயநலமற்றவனுக்கே	73
அன்பே அளிக்கிறது	77

பலவீனம் மரணத்திற்குச் சமானம்	83
தைரியமாக இருப்பது எப்படி?	92
வீரம் எனும் சக்தி	96
தன்னம்பிக்கை ஏன்?	100
தனித் தன்மையுடன் வளர்தல்	103
எது ஒழுக்கம்?	106
குறிக்கோளில் உறுதியாக இருத்தல்	111
மன ஒருமைப்பாட்டின் சக்தி	117
சமத்துவ உணர்வைப் பெறுதல்	123
நாம் சுதந்திரமானவர்கள்	125
வீறு நடை போடு	134

நமது நோக்கம்

இயையுடன் முன்னேறிய மனிதனைப் பார்க்கவே நாம் விரும்புகிறோம். ... அவன் விசாலமான இதயம், பரந்த மனம், (உயர்ந்த செயல்) இவற்றைப் படைத்திருக்க வேண்டும். ... உலகத்தின் துயரையும் துன்பத்தையும் தீவிரமாக உணரும் இதயம் படைத்தவனே நமக்குத் தேவை. ... உணர்வதோடு நில்லாமல், பொருட்களின் கருத்தை அறிந்து, இயற்கையினுள்ளும் அறிவிலும் ஆழமாக ஊடுருவிக் காண்பவனே நமக்குத் தேவை. அத்துடன் நிற்காமல், (அந்த உணர்ச்சியையும் அறிவையும்) செயலாக்குபவனே நமக்கு மிகவும் வேண்டப்படுபவன். மூளை, இதயம், செயல் இவை ஒருங்கிணைந்து செயல்படுவதே தேவை.

நம்மை மேம்படுத்துவதன் முக்கியத்துவம்

நம்மைச் சுற்றி நடப்பதை நீங்கள் காண்கிறீர்கள். அனைத்தின்மீதும் ஆதிக்கம்

செலுத்தும் ஒன்றாக உள்ளது உலகம். நமது சக்தியில் ஒரு பாகம் நமது சொந்த உடலைப் பாதுகாப்பதற்குச் செலவாகிறது; இதைத் தவிர ஒவ்வொரு சிறுபகுதியும் அல்லும் பகலும் பிறர்மீது ஆதிக்கம் செலுத்தவே பயன்படுகின்றன. நமது உடல்கள், நமது குணங்கள், நமது அறிவு, நமது ஆன்மீகம் எல்லாமே இடைவிடாமல் பிறர்மீது ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன. அதைப்போல் நாமும் அவற்றின் ஆதிக்கத்திற்கு உள்ளாகி வருகிறோம். இது நம்மைச் சுற்றி எங்கும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

இப்போது உதாரணம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். ஒருவர் வருகிறார்; அவர் நன்கு கற்றவர் என்பது உங்களுக்குத் தெரியும். அவரது மொழிநடை அழகாக உள்ளது. அவர் ஒருமணி நேரம் உங்களுடன் பேசுகிறார். ஆனால் அவர் சொன்னதில் எதுவும் பெரிதாக உங்கள் மனத்தில் பதியவில்லை. இன்னொருவர் வருகிறார், அவர் ஒருசில வார்த்தைகளே பேசுகிறார். அவை நன்றாக

'ஒழுங்குபடுத்தப்படவும் இல்லை. ஒரு வேளை இலக்கணப் பிழைகளும் அதில் காணப்படும். ஆனால் அவர் சொன்னது பேரளவிற்கு உங்கள் மனத்தை ஆக்கிர மிக்கிறது. உங்களுள் பலரும் இதை அனுபவித்திருப்பீர்கள். எனவே ஒரு போதும் வார்த்தைகள் மட்டுமே மனத்தின் பதிவை உண்டாக்கி விடுவதில்லை என்பது வெளிப்படை. வார்த்தைகள், ஏன், எண்ணங்கள்கூட ஒரு பதிவை உண்டு பண்ணுவதற்கு மூன்றிலொரு பங்கு சக்தியை மட்டுமே அளிக்கின்றன; மனிதனே மற்ற இரண்டு பங்கை அளிக்கிறான். மனிதனின் கவரும் ஆற்றல் (Personal Magnetism) என்று நீங்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சக்தியே வெளி யேறி உங்களிடம் பதிவை உண்டாக்கு கிறது.

நமது குடும்பங்களில் தலைவர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் வெற்றி பெறுகின்றனர், சிலர் பெறுவதில்லை. ஏன்? நாம் தோல்வியுறும்போது பிறரைக் குறை கூறுகிறோம். நாம் வெற்றி பெறாத

அந்தக் கணமே, நமது தோல்விக்குக் காரணம் இவர்தான் என்று ஒருவரைக் காட்டிவிடுகிறோம். தோல்வியுறுகின்ற யாரும் தனது சொந்தக் குற்றங்களையும் பலவீனங்களையும் ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. தன்னைக் குற்றம் அற்றவனாகக் கருதவும், குற்றத்தைப் பிறர்மீதோ, பிற பொருளின் மீதோ, ஏன், துரதிர்ஷ்டத்தின் மீதாவது சுமத்தவுமே ஒவ்வொருவனும் முயல்கிறான். குடும்பத் தலைவர்கள் தவறும்போது, சிலர் குடும்பத்தை நன்றாக நடத்துவதற்கும் பிறர் அவ்வாறு நடத்தாததற்கும் காரணம் என்ன என்பதைக் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும். வேறுபாட்டிற்குக் காரணம் மனிதனே, அவனது குணச்சிறப்பே, அவனது ஆளுமையே என்பதை அப்போது காண்பீர்கள்.

மனிதகுலத்தின் பெரிய தலைவர்களைக் கவனித்தால், அவர்களின் ஆளுமையே அவர்களைத் தலைவர்கள் ஆக்கியது என்பதையே எப்போதும் காண்போம். கடந்த காலத்தின் எல்லா

நூலாசிரியர்களையும் சிந்தனையாளர்களையும் எண்ணிப் பார்ப்போம். உண்மையைச் சொல்வதானால், அப்படி எத்தனை எண்ணங்களைத்தான் அவர்கள் எண்ணிவிட்டார்கள்? கடந்த காலத்திலிருந்த மக்கள்குலத் தலைவர்கள் நமக்கு விட்டுச்சென்ற நூல்கள் அனைத்தையும் பாருங்கள். அவர்கள் எழுதிய புத்தகங்கள் ஒவ்வொன்றையும் மதிப்பிடுங்கள். இன்று வரை உலகில் நினைக்கப்பட்டுள்ள, புதிய, சொந்தமான உண்மைக் கருத்துக்கள் கையளவு மட்டுமே. அவர்கள் நமக்கு விட்டுச்சென்ற எண்ணங்களை அவர்களுடைய நூல்களில் படியுங்கள். அந்த நூலாசிரியர்கள் நமக்கு மாபெரும் மக்களெனத் தோன்றுவதில்லை. எனினும் அவர்கள் தங்கள் காலங்களில் சிறந்தவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களை அவ்வாறு ஆக்கியது எது? அவர்கள் சிந்தித்த எண்ணங்களோ, அவர்கள் எழுதிய நூல்களோ, அவர்கள் செய்த சொற்பொழிவுகளோ மட்டும் அல்ல; அப்போது இருந்து, இப்போது

மறைந்துவிட்ட வேறு ஏதோ ஒன்று, அதாவது, அவர்களது ஆளுமை. நான் முன்பு கூறியதுபோல், அவர்களின் ஆளுமை மூன்றில் இரண்டு பங்கு, அவர்களின் அறிவும் வார்த்தைகளும் ஒரு பங்கு. உண்மை மனிதன் அதாவது அவர்களின் ஆளுமையே நம்மை ஆக்கிரமிக்கிறது. நம் செயல்கள் விளைவுகள் (Effect) மட்டுமே. மனிதன் உள்ளபோது செயல்கள் வந்தேயாக வேண்டும்; விளைவு, காரணத்தைப் பின் தொடர்ந்தே தீரும்.

கல்வி, பயிற்சி இவை அனைத்தின் லட்சியமும் இந்த மனிதனை உருவாக்குவதாகவே இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக நாம் வெறும் மேற்பூச்சு பூசி அழகுபடுத்த முயன்று வருகிறோம். அகத்தே ஒன்றும் இல்லாதபோது புறத்தை அழகுபடுத்துவதால் என்ன பயன்? எல்லா பயிற்சிகளின் பயனும் நோக்கமும் மனிதனை வளரச் செய்வதே. தன் சகோதர மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துபவன், அவர்கள்மீது மாய வலையை வீசியது போன்று அவர்களைக் கவர்பவன்

ஆற்றலின் ஒரு சுரங்கமாகிறான். அத்தகையவன் தயாராகும்போது, விரும்புகின்ற எதையும் அவனால் செய்ய முடியும். அவனது ஆளுமையின் ஆதிக்கம், எதன் மீது செலுத்தப்பட்டாலும் அதனைச் செயல்பட வல்லது ஆக்கும்.

நாம் உயர சில விதிமுறைகள்

இந்த ஆளுமையை வளர்க்க உதவுகின்ற நியதிகளைக் கண்டுபிடித்திருப்பதாக யோக சாஸ்திரம் கூறுகிறது. அந்த நியதிகளையும் முறைகளையும் ஒழுங்காகக் கவனத்துடன் பின்பற்றுவதால் ஒவ்வொருவரும் தன் ஆளுமையை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்கிறது அது. செயல்முறை வாழ்க்கைக் குரிய முக்கிய விஷயங்களுள் இது ஒன்று. கல்வி என்பதன் ரகசியம் இதுவே. இதனை அனைவரும் செயல்முறைப்படுத்திக் காண முடியும். இல்லறத்தார், ஏழை, செல்வந்தர், தொழிலாளி, ஆன்மீகவாதி என்று ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஆளுமையை வலுப்படுத்துவது என்பது முக்கியமான ஒன்று.

தூல நியதிகளுக்குப் பின்னால், மிக நுண்ணிய நியதிகள் இருப்பது நமக்குத் தெரியும். அதாவது, பௌதீக உலகம், மன உலகம், ஆன்மீக உலகம் என்று தனித் தனியாக அந்த உண்மைகள் இல்லை. இருப்பதெல்லாம் ஒன்றே. அது நுனி நோக்கிச் சிறுத்துச் செல்கின்ற கூம்பு வடிவம் போன்றது என்று ஒருவகையில் கூற லாம். அனைத்திலும் கனத்த பகுதி இங்குள்ளது. அது குவிந்து மென்மேலும் நுண்ணியதாகிச்செல்கிறது. மிகவும் நுண்ணியதை நாம் உயிர் என்கிறோம். 'அனைத்திலும் தூலமானது உடல். சரியாக இங்கு பிண்டத்தில் (Microcosm) உள்ளது போன்றே அண்டத்திலும் (Macrocosm) உள்ளது. நம் பிரபஞ்சமும் இதைப் போன்றே உள்ளது—பிரபஞ்சம் புறத்தே யுள்ள மிகவும் தூலமான பகுதி; இது ஒடுங்கி மேன்மேலும் நுண்ணியதாகி மிக நுண்ணியதாகி, இறுதியில் இறைவனாகிறது.

மிகப் பேராற்றல் இருப்பது நுண்மை யில்தானே தவிர, தூலத்தில் அல்ல என்பதையும் நாம் அறிவோம். ஒருவன்

பெரிய சுமையைத் தூக்குகிறான். அவனுடைய தசைகள் பருக்கின்றன, உடல் முழுவதும் கடும் முயற்சிக்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. அவனது தசைகள் வலுவானவை என்று நாம் கருதுகிறோம். ஆனால் மெல்லிய நூலிழை போன்ற நரம்புகளே தசைகளுக்குச் சக்தியை ஊட்டுகின்றன. இந்த நூலிழைகளில் ஒன்று, அந்தத் தசைகளைச் சேராதவாறு அறுபட்டால் போதும், வேலை செய்யும் திறனைத் தசைகள் முற்றிலும் இழந்துவிடும். இந்த மெல்லிய நரம்புகள் தம்மைவிட நுண்ணிய ஒன்றிலிருந்து ஆற்றலைக் கொண்டுவருகின்றன. அது தன்னைவிட மிக நுண்ணிய ஒன்றாகிய எண்ணத்திலிருந்து அந்த ஆற்றலைப் பெறுகின்றது. ஆக, உண்மையில் ஆற்றலுக்கு உறைவிடம் நுண்பொருளே. ஆனால் தூல இயக்கங்களில் அதனைக் காண்கிறோம், நுண் இயக்கங்களில் காண முடிவதில்லை. ஒரு தூலப் பொருள் அசையும்போது அதனைக் காண்கிறோம். எனவே இயக்கத்தையும் தூலப்

பொருட்களையுமே பொதுவாக நாம் ஒன்றுபடுத்திப் பார்க்கிறோம். உண்மையில் எல்லா ஆற்றலும் இருப்பது நுண்மையில்தான்.

நுண்பொருளில் இயக்கம் எதையும் நாம் காண்பதில்லை. ஒருவேளை இயக்கம் அவ்வளவு தீவிரமாக இருப்பதால் நாம் அதைக் காண முடியாமல் இருக்கலாம். ஆனால் ஏதேனும் விஞ்ஞானத்தாலோ, ஆராய்ச்சியாலோ, வெளியே தெரிகின்ற இந்த இயக்கத்திற்குக் காரணமான நுண்ணிய சக்திகளைக் கைப்பற்ற ஒரு துணை கிடைக்குமானால், புற இயக்கத்தையே கட்டுப்படுத்த முடியும். குளத்தின் அடியிலிருந்து நீர்க்குமிழி கிளம்புகிறது. அது வந்துகொண்டிருக்கும் போதெல்லாம் அதை நாம் காண்பதில்லை; நீர்மட்டத்திற்கு வந்து வெடிக்கும் போது மட்டுமே பார்க்கிறோம். அது போலவே, எண்ணங்கள் பேரளவிற்கு முதிர்ந்த பிறகே, அதாவது அவை செயல்களான பின்பு மட்டுமே அவற்றை நாம் உணர முடியும்.

நமது செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை, எண்ணங்களை அடக்க முடியவில்லை என்று அடிக்கடி நாம் முறையிடுகிறோம். எப்படி அடக்க முடியும்? நுண் இயக்கங்களை நாம் அடக்க முடிந்தால், அது எண்ணமாகும் முன்பே, செயலாகும் முன்பே, அதன் மூலத்தை நாம் பற்ற முடியுமானால் மட்டுமே அதனை முழுமையாக நாம் அடக்க முடியும். இந்த நுண்ணிய சக்தி களை, நுண்ணிய காரணங்களைப் பகுக்க வும், ஆராயவும், அறியவும், இறுதியாக, அடக்கியாளவும் முறை ஒன்று இருக்கு மானால் அப்போதுதான் நம்மை நாம் அடக்க முடியும்.

தன் மனத்தை அடக்க முடிந்தவனால் மற்ற எல்லா மனங்களையும் கட்டாயமாக அடக்க முடியும். இதனாலேயே தூய்மை யும் ஒழுக்கமும் எப்போதும் மதத்தின் நோக்கமாக வைக்கப்பட்டுள்ளன. தூய்மையும் ஒழுக்கமும் வாய்ந்தவன் தன்னை அடக்கி ஆள்கிறான். எல்லா மனங்களும் ஒரே தன்மையுடையவை;

ஒரே பெரிய மனத்தின் பகுதிகள். களிமண்கட்டி ஒன்றை அறிந்தவன், பிரபஞ்சத்திலுள்ள களிமண் அனைத்தையும் அறிந்தவன் ஆகிறான். தன் மனத்தை அறிந்து அடக்குபவன் ஒவ்வொரு மனத்தையும் பற்றிய ரகசியத்தை அறிகிறான்; ஒவ்வொரு மனத்தையும் அடக்க வல்லவன் ஆகிறான்.

நுண்ணிய பகுதிகளை அடக்கிவிட்டோமானால் பௌதீக உலகின் தீமையின் பெரும் பகுதியை நாம் ஒழித்துவிட முடியும். நுண்ணிய இயக்கங்களை நாம் அடக்குவோமானால் பல கவலைகளை நீக்கிவிட நம்மால் முடியும். இந்த நுண்ணிய ஆற்றல்களை அடக்க முடிந்தால் பல தோல்விகளைத் தவிர்த்துவிடலாம்.

நம்மை நாமே செதுக்கிக் கொள்ளல்

மனிதனின் வெளிப் பொறிகள் அமைந்துள்ள இந்த உடல் தூலவுடல் எனப்படுகிறது. சம்ஸ்கிருதத்தில் இதை ஸ்தூல சரீரம் என்பர். இதற்குப் பின்னால் தான் புலன், மனம், புத்தி, நான்-உணர்வு

என்ற தொடர் அமைகிறது. இவையும், உயிர்ச் சக்திகளும் இணைந்த ஒன்றே நுண்ணுடல் அல்லது சூட்சும சரீரம். இந்தச் சக்திகள் மிக நுட்பமான அணுக் களால் ஆனவை; எத்தகைய தீங்கு ஏற் பட்டாலும் இந்த உடம்பு அழியாத அளவுக்கு அவை நுட்பமானவை. எந்த விதமான கேடும் அதிர்ச்சியும் சூட்சும உடலைப் பாதிப்பதில்லை.

நம் கண்ணுக்குப் புலனாவதான தூல வுடல் பருப்பொருளால் ஆனது; எனவே அது தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது; மாறுபடுகிறது. உட்கருவிகளான மனம், புத்தி, நான்-உணர்வு என்பவை மிகமிக நுட்பமான பொருளால் ஆனவை. எனவே பல யுகங்களானாலும் அவை அழியாமல் இருக்கும். வேறு எதுவுமே தடைசெய்ய முடியாத அளவிற்கு நுட்பமானவை இவை. இவை எந்தத் தடைகளையும் கடந்துவிடும். இந்தத் தூலவுடல் அறிவற்றது; நுண்ணுடலும் அதுபோன்றது தான். ஆனால் இது சற்று நுட்பமான ஜடப்பொருளால் ஆக்கப்பட்டுள்ளது.

இந்த நுண்ணுடலின் ஒரு பகுதி மனம்; ஒரு பகுதி புத்தி; ஒரு பகுதி நான்-உணர்வு. ஆனாலும் இவற்றில் எந்த ஒன்றும் 'அறிபவன்' ஆக முடியாது. இவற்றுள் எதுவும் பார்ப்பவனாக, சாட்சியாக, யாருக்காக அறிவுச்செயல் நடக்கிறதோ அவனாக, நடக்கும் செயலைப் பார்ப்பவ னாக ஆக முடியாது. மனத்திலும் புத்தி யிலும் நான்-உணர்விலும் ஏற்படும் இயக் கங்கள் எல்லாம் இவை அல்லாத வேறு யாருக்காகவோதான் இருக்க வேண்டும். இவை நுட்பமான ஜடப்பொருள் அணுக் களால் ஆனவை. ஆதலால் தன்னொளி உடையவையாக இருக்க முடியாது. இவற்றின் ஒளி இவற்றிற்குச் சொந்தமான தாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, இந்த மேஜையை எந்த ஜடப்பொருளும் உருவாக்கியிருக்க முடியாது. எனவே இவற்றிற்கெல்லாம் பின்னால் யாரோ ஒருவர் இருக்க வேண்டும்; இவரே எல்லா தோற்றங்களுக்கும் உண்மைக் காரண மானவர்; உண்மையாகவே எல்லாவற்றை யும் அனுபவிப்பவர். இவரையே

வடமொழியில் ஆத்மன் என்கிறார்கள். இவரே மனிதனின் உண்மை ஆன்மா.

உடல் ஒவ்வொரு நிமிடமும் அழிந்து கொண்டே இருக்கிறது. மனமோ தொடர்ந்து மாறியபடி இருக்கிறது. உடல் பலவற்றின் சேர்க்கை; மனமும் அத்தகையதே. எனவே இவை எல்லா மாறுதல்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைய முடியாது. ஆனால் தூலப் பொருளான இந்த மெல்லிய உறையையும், இதற்கு அப்பாலுள்ள மனம் என்ற நுட்பமான உறையையும் தாண்டி இருக்கிறது ஆன்மா. இதுவே மனிதனது உண்மைத் தத்துவம். இது நிலையானது; என்றுமே பந்தப்படாதது. இதன் அழியாமை, சுதந்திரம் ஆகிய தன்மைகளே எண்ணம், ஜடப்பொருள் போன்ற போர்வைகளை ஊடுருவி, பெயர் உருவம் என்ற நிறங்களைக் கடந்து, சுதந்திரம் அழியாமை என்ற தன்மைகளை வற்புறுத்தி நிற்கிறது. மிகவும் தடித்த அஞ்ஞானம் என்ற போர்வைகளையும் ஊடுருவி இந்த ஆன்மாவின் அழிவின்மையும்,

ஆனந்தமும், அமைதியும், தெய்வீகமும் பிரகாசித்து, நாம் இவற்றை உணரும்படிச் செய்கின்றன. ஆன்மாதான் உண்மை மனிதன். அவன் பயமும் அழிவும் பந்தமும் அற்றவன்.

வெளிச் சக்தி எதுவும் பாதிக்க முடியாத போது, எந்த மாறுதலையும் உண்டாக்க இயலாதபோதுதான் சுதந்திரம் என்பது இருக்க முடியும். எல்லா நியதிகளுக்கும், எல்லா எல்லைகளுக்கும், எல்லா விதி களுக்கும், காரண காரியம் எல்லாவற்றிற் கும் அப்பால்தான் சுதந்திரம் என்பது இருக்க முடியும். எனவே எந்த வகை மாறு தலுக்கும் உட்படாததுதான் சுதந்திரமாக வும் அழிவற்றதாகவும் இருக்க முடியும். இருக்கின்ற இதுதான் அதாவது மனிதனது உண்மைத் தத்துவம்தான் ஆன்மா. இது மாறுதல் இல்லாதது; கட்டுப்பாடுகளுக்கு உட்படாதது. எனவே இதற்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை.

ஒவ்வொரு மனித ஆளுமையையும் ஒரு கண்ணாடிக் கோளத்திற்கு ஒப்பிட லாம். ஒவ்வொன்றின் நடுவிலும்

இறைவனிடமிருந்து வெளிப்படும் தூய வெள்ளொளி இருக்கிறது. ஆனால் கண்ணாடிகள் பல நிறங்களிலும், பல கனங்களிலும் இருப்பதால் வெளிவரும் கதிர்கள் பல்வேறு தோற்றங்களைப் பெறு கின்றன. எல்லா நடு ஒளிகளும் ஒரே மாதிரி யானவை, ஒரே அழகைக் கொண்டவை. வித்தியாசமாகத் தோன்றுவதற்குக் காரணம் அது வெளிப்படுகின்ற புறக் கருவிகளில் உள்ள குறைபாடுகளே. நாம் மேலே உயரஉயர, அந்தக் கருவி மேலும் தெளிவாக ஒளி வீசும் தன்மையை அடைகிறது.

தெய்வீகம் மனிதனின் அடிப்படை

'அழியாத பேரின்பத்தின் குழந்தை களே!' ஆ, ஆ! எவ்வளவு இனிமையான, எவ்வளவு நம்பிக்கை ஊட்டும் பெயர்! அருமை சகோதரர்களே! அந்த இனிய பெயரால் உங்களை நான் அழைக்க அனு மதி தாருங்கள். அழியாத பேரின்பத்தின் வாரிசுகளே! ஆம், உங்களைப் பாவிகள் என்று அழைக்க இந்து மறுக்கிறான். நாம்

ஆண்டவனின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள், புனிதமான வர்கள், பூரணர்கள். வையத்துள் வாழும் தெய்வங்களே! நீங்கள் பாவிகளா? மனிதர் களை அப்படிச் சொல்வது பாவம்; மனித இயல்புக்கே அது அழியாத களங்கம். சிங்கங்களே, வீறுகொண்டு எழுங்கள். நீங்கள் ஆடுகள் என்கிற மாயையை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அழியாத ஆன்மாக்கள், சுதந்திரமான, தெய்வீகமான, நிரந்தரமான ஆன்மாக்கள்! நீங்கள் ஜடப்பொருள் அல்ல, நீங்கள் உடல் அல்ல; ஜடப் பொருள் உங்கள் பணியாள், நீங்கள் ஜடப் பொருளின் பணியாளர் அல்ல.

இந்த உலகம், இந்த உடல், இந்த மனம் என்பவைகூட மூடநம்பிக்கைகளே. எல்லையற்ற ஆன்மாக்கள் நீங்கள், மின்னு கிற நட்சத்திரங்களால் ஏமாற்றப்படுவதா! வெட்கம். நீங்கள் தெய்வங்கள், உங்களால் தான் அந்த மின்னுகிற நட்சத்திரங்களே இருக்கின்றன.

மனித இயல்பிலுள்ள வலிமை யானவை, நல்லவை, ஆற்றல்

பொருந்தியவை எல்லாம் இந்தத் தெய் வீகத்தின் விளைவே. பலரிடம் இந்தத் தெய்வீகம் மறைந்துள்ளது. உண்மையில் மனிதனுக்கும் மனிதனுக்கும் வேறுபாடே இல்லை. எல்லா உயிர்களும் ஒன்றுபோல் தெய்வீகமானவை. எல்லையற்ற பெரிய கடல் ஒன்று நமக்குப் பின்னால் இருப்பது போலுள்ளது. நீங்களும் நானும் எல்லாம் அந்தப் பெருங்கடலில் தோன்றும் அலை களே. இந்த எல்லையற்ற தன்மையை வெளியில் வெளிப்படுத்தவே நாம் ஒவ்வொருவரும் முயன்று வருகிறோம். எனவே நமது பிறப்புரிமையாக, நமது உண்மை இயல்பாக நம் ஒவ்வொரு வரிலும் எல்லையற்ற உண்மை-அறிவு-இன்பப் பெருங்கடல் மறைந்துள்ளது. அந்தத் தெய்வீகத்தை வெளிப்படுத்து வதற்கான ஆற்றல் மிகுந்தும் குறைந்தும் இருப்பதுதான் நம்மிடையே வேறு பாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

ஆன்மாவின் எல்லையற்ற ஆற்றல் ஜடப்பொருளில் செயல்படும்போது பௌ தீக வளர்ச்சி உண்டாகிறது; எண்ணத்தில்

செயல்பட்டால் அறிவு வளர்ச்சி உண்டா கிறது; தன்னிடமே செயல்படும்போது மனிதன் தெய்வமாகிறான்.

புலனின்பங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல

மனிதனின் லட்சியம் இன்பம் அல்ல, அறிவே. இன்பமும் போகமும் ஒரு முடிவுக்கு வந்தே தீரும். இந்த இன்பத்தை லட்சியமாக எண்ணுவது தவறு. தான் அடைய வேண்டிய லட்சியம் இன்பமே என்று மனிதன் முட்டாள்தனமாக நினைப் பதுதான் இன்று உலகில் காணப்படும் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணம். ஆனால் அவன் சென்று கொண் டிருப்பது இன்பத்தை நாடி அல்ல, அறிவைத் தேடியே. இன்பமும், அது போல் துன்பமும் பெரிய ஆசிரியர்கள், நன்மையைப் போலவே தீமையிலிருந்தும் அவன் படிப்பினை பெறுகிறான்.... குணத்தை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரிசமமான பங்கு வகிக் கின்றன. குணத்தைச் செப்பனிடுவதிலும்

நன்மை, தீமை இரண்டிற்கும் சம இடம் உண்டு. சிலவேளைகளில் இன்பத்தை விடத் துன்பமே சிறந்த ஆசிரியராக அமைகிறது. உலகம் தந்துள்ள உயர்ந்த மனிதர்களின் வாழ்வை ஆராய்ந்தோமா னால், பெரும்பாலோரது வாழ்க்கையில் இன்பங்களைவிடத் துன்பங்களே, செல் வத்தைவிட வறுமையே அவர்களுக்குப் பாடமாக அமைந்துள்ளன; புகழ்மொழி களைவிட ஏமாற்றங்களே, அடிகளே அவர்களது அக ஆற்றல்களை வெளியே கொண்டு வந்துள்ளன என்று நான் துணிந்து கூறுவேன்.

புலனின்பம் மனித குலத்தின் குறிக் கோள் அல்ல, அறிவுதான் (ஞானம்) வாழ்க்கையின் இலட்சியம். மிருகம் புலன்களின்மூலம் இன்புறுவதைவிட மனிதன் அறிவின்மூலம் அதிகம் இன்புறு வதை நாம் காண்கிறோம். மனிதன் தன் அறிவுஇயல்பில் இன்புறுவதைவிட ஆன்மீக இயல்பில் அதிகம் இன்புறுகிறான். ஆகவே மிகவுயர்ந்த அறிவு ஆன்மீக அறிவாகத்தான் இருக்க வேண்டும். இந்த

அறிவின் காரணமாகப் பேரின்பம் விளைகிறது. இந்த உலகின் பொருட்கள் எல்லாம் அந்த உண்மையறிவு மற்றும் பேரின்பத்தின் நிழல்கள், அவற்றின் மூன்றாந்தரமான அல்லது நாலாந்தரமான வெளிப்பாடுகள் மட்டுமே.

முட்டாள்கள்தான் புலனின்பங்களை நாடி ஓடுகிறார்கள். புலனின்பங்களில் உழல்வது எளிது. உண்பது, உறங்குவது என்ற பழைய பாதையிலேயே செல்வது எளிது. நவீனத் தத்துவவாதிகளின் கருத்து என்ன? புலன்களின் திருப்திக்குக் காரணமான கருத்துக்களைக் கூறி அதற்கு மதம் என்ற முத்திரை குத்துவதுதான். இது ஆபத்தானது. புலன்வழிச் செல்லும் வாழ்வில் மரணம்தான் இருக்கிறது. ஆன்ம நிலையில் நிலைபெற்று வாழ்வதே வாழ்க்கை. வேறு எந்தவிதமான வாழ்க்கையும் மரணமே. வாழ்க்கை முழுவதுமே ஓர் உடற்பயிற்சிக்கூடம் எனலாம். உண்மையான வாழ்வை அனுபவிக்க வேண்டுமானால் இதைக் கடந்து அப்பால் செல்ல வேண்டும்.

நம்மை ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்?

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும், நம் உடம்பின் ஒவ்வோர் அசைவும், நாம் எண்ணுகின்ற ஒவ்வோர் எண்ணமும் சித்தத்தில் ஒரு பதிவை விட்டுச் செல்கிறது. இந்தப் பதிவுகள் மேற்பரப்பில் தென்படாதிருக்கலாம். ஆனாலும் ஆழ் மனத்தில் நாம் அறியாமலே செயல்புரியும் அளவு வலிமை படைத்தவை அவை. ஒவ்வொரு கணமும் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை மனத்திலுள்ள இந்தப் பதிவுகளின் மொத்தமே உருவாக்குகிறது. இப்போது இந்தக் கணத்தில் நான் என்னவாக இருக்கிறேனோ அது என்னுடைய கடந்தகால சம்ஸ்காரங்களுடைய மொத்தத்தின் விளைவாகும். இதுதான் உண்மையில் குணம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு மனிதனுடைய குணத்தை இந்த சம்ஸ்காரங்களின் மொத்தமே நிர்ணயிக்கிறது. நல்ல சம்ஸ்காரங்கள் மேலோங்கியிருந்தால் குணம் நல்லதாக அமைகிறது. தீயவை மேலோங்கியிருந்தால் குணம் தீயதாக அமைகிறது. ஒரு மனிதன்

தொடர்ந்து தீய வார்த்தைகளைக் கேட்டு, தீய எண்ணங்களையே எண்ணி, தீய செயல்களையே செய்து கொண்டிருந்தால் அவனது மனம் தீய சம்ஸ்காரங்களால் நிறைகிறது. அவை அவனது சிந்தனை யையும் செயலையும் அவன் அறியாமலே ஆட்டிப்படைக்கின்றன.

உண்மையில் இந்தத் தீய சம்ஸ் காரங்கள் தொடர்ந்து செயல்பட்ட வண்ணமே இருக்கின்றன. அவற்றின் விளைவு தீமையாகத்தான் இருக்கும்; அதன் காரணத்தால் அந்த மனிதன் தீயவ னாக இருக்கிறான். அவனால் இதைத் தவிர்க்க முடியாது. இந்தச் சம்ஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களைச் செய்வதற் கான ஆற்றல் மிக்கதொரு தூண்டுசக்தியை அவனுள் உருவாக்கும். தன் சம்ஸ்காரங் களின் கையில் மனிதன் எந்திரம் போலாகி விடுகிறான். அவை அவனைத் தீமை செய்யும்படிக் கட்டாயப்படுத்துகின்றன.

அதுபோலவே ஒருவன் நல்ல நினைவுகளையே நினைத்து, நற்செயல் களையே செய்தால் சம்ஸ்காரங்களின்

மொத்தமும் நல்லதாக இருக்கும். இவை அவனது நினைப்பும் முயற்சியும் இல்லாமலேயே, அவனை நற்செயல்களில் தூண்டுகின்றன. நல்லது செய்வதிலிருந்து தடுக்க முடியாத மனப்பாங்கு உண்டாகும் அளவிற்கு ஒருவன் மிக அதிகமாக நல்லவற்றைச் செய்வானானால், மிக அதிகமாக நல்லவற்றையே நினைப்பானானால், தன்னையும் மீறி அவன் தீமை செய்ய முயன்றாலும், அவனது மனப்பாங்குகளின் மொத்தமும் சேர்ந்து அவனைத் தீமை செய்ய விடாமல் தடுத்துவிடும். அவன் முழுக்கமுழுக்க நல்ல மனப்பாங்குகளின் ஆதிக்கத்தில் இருக்கிறான். அந்த நிலையில் ஒரு மனிதனின் நற்பண்பு நிலை பெற்றுவிட்டது என்று கூறலாம்.

நீங்கள் ஒருவரது உண்மையான குணத்தை அறிய விரும்பினால், அவரது மகத்தான காரியங்களைப் பார்த்து முடிவுக்கு வராதீர்கள். முட்டாள்கூட எப்போதாவது சிலநேரங்களில் மகத்தான மனிதனாக முடியும். ஒருவன் மிகமிகச் சாதாரணச் செயல்களைச் செய்யும்போது

கவனியுங்கள். அவையே அவனது உண்மையான குணத்தைத் தெரிவிப்பவை. சில குறிப்பிட்ட நேரங்கள் மிகச் சாதாரண மனிதர்களைக்கூட ஒருவகையான மகத்தான நிலைக்கு உயர்த்திவிடும். எந்தச் சூழ்நிலையிலும் யாருடைய குணம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்.

உலகில் நாம் காண்கின்ற எல்லா செயல்களும், சமுதாயத்தின் எல்லா இயக்கங்களும், நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அத்தனையும் வெறும் எண்ணங்களின் வெளித்தோற்றமே; மனித சங்கல்பத்தின் (Will) வெளிப்பாடுகளே. எந்திரங்கள், கருவிகள், நகரங்கள், கப்பல்கள், போர்க் கப்பல்கள் இவையெல்லாமே மனிதனது சங்கல்பத்தின் வெளிப்பாடுகளே. இந்தச் சங்கல்பம் குணத்தால் அமைகிறது; குணமோ செயல்களால் உருவாக்கப்படுகிறது. செயல் எத்தகையதோ அத்தகையதே சங்கல்பத்தின் வெளிப்பாடும். உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள உறுதிவாய்ந்த

சங்கல்பம் கொண்டவர்கள் எல்லோரும் மாபெரும் செயல்வீரர்களாகவே இருந்திருக்கிறார்கள். காலங்காலமாகத் தொடர்ந்து செய்துவந்த செயல்களின் மூலம் பெற்ற ஆற்றல் வாய்ந்த தங்கள் சங்கல்பத்தால் உலகையே மாற்றிஅமைக்க வல்ல மாபெரும் மனிதர்களாக இருந்தார்கள் அவர்கள்.

எண்ணங்களுக்கு ஏற்ப நாம் உருவாகிறோம். ஆகவே என்ன நினைக்கிறாய் என்பதில் எச்சரிக்கையாக இரு. சொற்கள் இரண்டாம் பட்சமானவை. எண்ணங்கள் வாழ்கின்றன, நீண்ட தூரம் செல்கின்றன. நமது ஒவ்வோர் எண்ணத்திலும் நமது குணம் படிந்திருக்கிறது. மகான் ஒருவரின் வேடிக்கைப் பேச்சும் ஏச்சுகளும்கூடத் தூய அன்பில் தோய்ந்தவையாக இருக்கும், அவை நன்மையே பயக்கும்.

பெரிய விஷயங்களைச் சாதிக்க மிக உயர்ந்த, இடையறாத முயற்சி தேவை. ஒருசிலர் தோற்றாலும் நாம் அதை எண்ணிக் குழம்ப வேண்டியதில்லை. பலர் வீழ்வதும், தடைகள் வருவதும்,

பெருந்துன்பங்கள் எழுவதும், மனித இதயத்திலுள்ள சுயநலம் போன்ற எல்லா பேய்களும் ஆன்மீகம் என்னும் பெரும் நெருப்பால் விரட்டியோட்டப்பட இருக்கின்ற வேளையில் கடும் போராட்டம் செய்வதும் இயல்பாக ஏற்படக்கூடியவை தான். நன்மைக்கான பாதைதான் பிரபஞ்சத்திலேயே மிகவும் கரடுமுரடானது, மிகவும் செங்குத்தானது. அந்தப் பாதையில் இத்தனைபேர் வெற்றி பெறுவதுதான் ஆச்சரியத்திற்குரிய விஷயம்; இத்தனை பேர் தோற்றுப் போவது வியப்பிற்கு உரியதல்ல. ஆயிரம் முறை இடறி விழுவதன்மூலமே நற்பண்பை நிலைநிறுத்த வேண்டும்.

பற்றின்மை வேண்டுமானால் மனம் தெளிவாக, நன்மை நிறைந்ததாக, விவேகம் உடையதாக இருக்க வேண்டும். பயிற்சி ஏன் வேண்டும்? ஒவ்வொரு செயலும் நீர்ப்பரப்பில் எழுகின்ற அலைகளைப் போன்றவை. அலைகள் ஓய்ந்த பின் என்ன எஞ்சியிருக்கிறது? சம்ஸ்காரங்கள், பதிவுகள். இத்தகைய பல

பதிவுகள் மனத்தில் ஏற்படும்போது அவை ஒருங்கிணைந்து பழக்கம் ஆகிறது. 'பழக்கம் என்பது இரண்டாம் இயல்பு' என்பர், முதல் இயல்பும் அதுதான், மனிதனின் முழு இயல்பும் அதுதான். நாம் இப்போது எதுவெல்லாமாக இருக் கிறோமோ அது பழக்கத்தின் விளைவு தான். இது நமக்கு ஆறுதலாக இருக்கிறது. ஏனெனில் அது வெறும் பழக்கம் மட்டுமே என்றால், எந்த நேரத்தில் வேண்டு மானாலும் அதை உருவாக்கலாம், இல்லாமலும் செய்யலாம்.

மனத்தைக் கடந்து செல்கின்ற ஒவ்வொரு விருத்தியும் அதில் விட்டுச் செல்கின்ற விளைவே சம்ஸ்காரம். இந்தப் பதிவுகளின் ஒட்டுமொத்தமே நமது குணம். இதில் ஏதாவது ஒரு விருத்தி மேலோங்கும்போது அதற்கேற்ப ஒருவனது குணம் அமைகிறது. நல்லவை மேலோங்கினால் நல்லவன் ஆகிறான்; தீயவை மேலோங்கினால் தீயவன் ஆகிறான். மகிழ்ச்சியானவை மேலோங்கி னால் மகிழ்ச்சி அடைகிறான். தீய

பழக்கங்களை நீக்குவதற்கு ஒரே வழி நல்ல பழக்கங்களை வளர்த்துக்கொள்வது தான். தீய சம்ஸ்காரங்கள் விட்டுச் சென்றுள்ள தீயபழக்கங்களை நல்ல பழக்கங்களால்தான் கட்டுப்படுத்த வேண் டும். தொடர்ந்து நற்செயல்களைச் செய் யுங்கள். புனித எண்ணங்களை எப்போதும் எண்ணுங்கள். தீய சம்ஸ்காரங்களை அடக்க இது ஒன்றுதான் வழி. திருந்தவே முடியாதவன் என்று ஒருவனை ஒரு போதும் கூறாதீர்கள். ஏனெனில் பல பழக்கங்களின் மொத்தமான ஒரு குணத்தையே அவன் வெளிப்படுத்து கிறான். இதனைப் புதிய நல்ல பழக்கங் களால் மாற்றிவிட முடியும். தொடர்ந்த பழக்கம் குணத்தை உருவாக்குகிறது. தொடர்ந்த பழக்கங்கள் மட்டுமே குணத்தை மாற்றியமைக்க முடியும்.

விட்டுவிடு, உலகத்தைத் துறந்துவிடு. சமையல் அறைக்குள் திருட்டுத்தனமாகப் புகுந்து இறைச்சித் துண்டைத் தின்னும் நாயைப் போன்ற நிலையில் நாம் இருக் கிறோம். யார் எப்போது வந்து

விரட்டுவார்களோ என்ற பயத்தில் சுற்று முற்றும் பார்த்தபடித் தின்னும் நாயைப் போலிருக்கிறது நமது நிலைமை. நீ அரசன் என்பதையும் இந்த உலகம் உனக்குச் சொந்தமானது என்பதையும் தெரிந்து கொள். உலகத்தைத் துறக்காதவரை, தளை அறுபடாதவரை இந்த நிலை உனக்கு ஏற்படாது. புற அளவில் உன்னால் உலகைத் துறக்க முடியாவிட்டால் மனத் தாலாவது துறக்கப் பழகிக்கொள், உள்ளத்துள் அனைத்தையும் துறந்துவிடு, வைராக்கியத்தைக்கடைப்பிடி. இதுவே உண்மைத் தியாகம். இது இல்லாமல் உனக்கு ஆன்மீகம் கிடையாது. ஆசைப் படாதே. ஏனெனில் ஆசைப்படுவது உனக்குக் கிடைக்கும், அதைத் தொடர்ந்து பயங்கரமான தளையும் வரும்.

எண்ணங்களின் தாக்கம்

நம்மிடமிருந்து புறப்படுகின்ற ஒவ் வொரு செயலும் நம்மிடமே எதிர்ச்செய லாகத் திரும்பி வருவதுபோல், நம் செயல்கள் பிறரிடமும், பிறரது செயல்கள்

நம்மிடமும் செயல்படுகின்றன. தீமை செய்கின்ற ஒருவன் மேலும்மேலும் தீயவனாகிறான். அவனே நல்லது செய்யத் தொடங்கும்போது, மேலும்மேலும் வலிமையடைந்து, எப்போதும் நல்லது செய்யக் கற்றுக் கொள்கிறான். இந்த உண்மையை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஒரு செயல் ஏற்படுத்தும் தாக்கத்தின் இத்தகைய தீவிரத்தை, நமது செயல்கள் பரஸ்பரம் ஒவ்வொருவர்மீதும் விளைவு களையும் எதிர்விளைவுகளையும் உண்டாக்குகின்றன என்ற உண்மையின் மூலம் அல்லாமல், வேறு எதன்மூல மாகவும் விளக்க முடியாது.

பௌதீக விஞ்ஞானத்திலிருந்து இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள் வோம். நான் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யும்போது, என் மனம் குறிப்பிட்ட ஓர் அதிர்வுநிலையில் இருக்கிறது. இந்த அதிர்வு நிலையில் இருக்கின்ற மற்றெல்லா மனங் களும் என் மனத்தால் பாதிக்கப்படலாம். ஓர் அறையில் பல்வேறு இசைக்கருவிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

அவை அனைத்தின் தந்திக்கம்பிகளும் ஒரேபோல் சுருதி சேர்க்கப்பட்டுள்ளன. இப்போது ஒரு கருவியின் தந்தியை மீட்டினால், மற்ற கருவிகளும் அதே சுரத்தைத் தரும் விதத்தில் அதிரத் தொடங்குவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதுபோலவே ஒரு குறிப்பிட்ட அதிர்வுநிலையிலுள்ள எல்லா மனங்களும், அதே நிலையிலுள்ள எண்ணத்தால் சம அளவில் பாதிக்கப் படுகின்றன. ஆனால் தூரம் மற்றும் வேறு பல காரணங்களைப்பொறுத்து இந்தப் பாதிப்பின் தாக்கம் மனத்திற்கு மனம் மாறுபடுகிறது. என்றாலும் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலையிலேயே அந்த மனம் எப்போதும் இருக்கிறது. உதாரணமாக, நான் ஒரு தீமை செய்கிறேன். அப்போது என் மனம் குறிப்பிட்ட ஓர் அதிர்வுநிலையில் இருக்கிறது. அப்போது பிரபஞ்சத்தில் அதே அதிர்வுநிலையில் இருக்கும் எல்லா மனங்களும் அந்த அதிர்வால் பாதிக்கப்படலாம். அதுபோலவே நான் நல்ல காரியம் செய்யும்போது, என் மனம் வேறோர் அதிர்வுநிலையில் இருக்கும்; அப்போது

அதே அதிர்வுநிலையில் இருக்கும் எல்லா மனங்களும் அதனால் பாதிக்கப்படலாம். இப்படி ஒரு மனத்தின்மீது மற்றொரு மனத்திற்குள்ள ஆற்றல், ஒரளவிற்கு அந்த அதிர்வு கூடியும் குறைந்தும் இருப்பதற்கு ஏற்பவே இருக்கும்.

இந்த உதாரணத்தைத் தொடர்வோம். ஒளியின் அலைகள் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடையுமுன் லட்சோபலட்சம் ஆண்டுகள் பயணம் செய்யலாம். அது போலவே எண்ண அலைகளும் தங்களுக்கு ஏற்றவிதத்தில் அதிர்கின்ற ஒரு பொருளைச் சென்றடைய நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பயணம் செய்ய நேரலாம். எனவே இந்த வானவெளி அத்தகைய நல்ல மற்றும் தீய அலைகளால் நிரம்பி இருப்பதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. ஒவ்வொரு மூளையிலிருந்தும் வெளிக் கிளம்புகின்ற ஒவ்வோர் எண்ணமும் அதை ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான பொருளை அடையும்வரையில் அதிர்ந்து கொண்டேயிருக்கின்றன என்று சொல்லலாம். அவற்றை ஏற்றுக்

கொள்வதற்குத் தகுதியாக இருக்கின்ற மனம் உடனடியாக ஏற்றுக்கொள்கிறது. ஒருவன் தீய செயல்களைச் செய்யும்போது அவன் தன் மனத்தை ஒரு குறிப்பிட்ட அதிர்வு நிலைக்குக் கொண்டு வருகிறான். அப்போது, அதே அதிர்வுநிலையில் வான வெளியில் மிதந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்ற எண்ண அலைகள் எல்லாம் அவனது மனத்தில் நுழைய முயல்கின்றன. இதனால்தான் பொதுவாக, தீமை செய்பவன் மேலும்மேலும் தீமை செய்துகொண்டே இருக்கிறான்; அவனது செயல் தீவிரமாகிறது. நன்மை செய் பவனின் விஷயமும் இதுதான். அவன் வானவெளியில் உள்ள நல்ல அலைகளுக் காகத் தன்னைத்திறந்து வைக்கிறான். அவனது நற்செயல்களும் உறுதி பெறு கின்றன.

எனவே நாம் தீமை செய்யும்போது இரண்டு வகையான அபாயங்களை விளை விக்கிறோம். முதலில் நம்மைச் சுற்றியுள்ள தீய ஆதிக்கங்கள் நம்மீது செயல்பட நாமே இடம் கொடுக்கிறோம். இரண்டாவதாக

மற்றவர்களைப் பாதிக்கின்ற—அது ஒரு வேளை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு பாதிக்கலாம்—தீமையைச் செய்யும்போது நாம் நம்முடன் சேர்த்துப் பிறரையும் துன்புறுத்துகிறோம். மனிதனிலுள்ள மற்ற எல்லா சக்திகளையும் போலவே நன்மை தீமை ஆகிய சக்திகளும் புறத்திலிருந்தே வலிமையைப் பெறுகின்றன.

இந்த லட்சியத்தால் உங்களை நிறையுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும் இதையே சிந்தியுங்கள். இந்தச் சிந்தனையின் ஆற்றலால் உங்கள் செயல்கள் அனைத்தும் பெருக்கப்படும், மாறுபாடு அடையும், தெய்வீகமாகும். ஜடப் பொருள் வலிமையானது என்றால் சிந்தனை எல்லாம்வல்லது. இந்தச் சிந்தனை உங்கள் வாழ்க்கையில் முத்திரை பதிக்கட்டும். எல்லாம் வல்ல உங்கள் ஆற்றல், உங்கள் சிறப்பு, உங்கள் மகிமை இவைபற்றிய சிந்தனையால் உங்களை நிறையுங்கள், உங்கள் தலையில் மூட நம்பிக்கை எதுவும் புகாதிருக்கக் கடவுள்

அருள் புரியட்டும்! பிறப்பிலிருந்தே இத்தகைய மூடநம்பிக்கைகள் நம்மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருக்குமாறும் நமது வளர்ச்சியைக் கெடுக்கின்ற பல வீனம், தீமை போன்ற கருத்துக்கள் நம்மைச் சூழ்வதையும் கடவுள் தடுப் பாராக! மிக உயர்ந்த, மிகச் சிறந்த உண்மை களை அறியவல்ல எளிய பாதைகளை மனிதன் அடையக் கடவுள் கருணை செய் வாராக! மனிதன் இவற்றைக் கடந்தேயாக வேண்டியிருக்கிறது. உங்கள் பின்னால் வருபவர்களுக்குப் பாதையை மேலும் கடினமாக்காதீர்கள்.

எதிர்மறை எண்ணங்களைக் கட்டுப்படுத்துதல்

இந்த நான்குவிதக் கருத்துக்கள் நம்மிடம் இருக்க வேண்டும். எல்லோரிட மும் நட்புக்கொள்ள வேண்டும். துன்பப் படுபவர்களிடம் இரக்கம் காட்ட வேண் டும். பிறர் மகிழ்ச்சி அடைந்தால் நாமும் மகிழ வேண்டும். தீயவர்களிடம் அலட்சிய மாக இருக்க வேண்டும். நம் முன் வரும்

எல்லா விஷயங்களிலும் இந்த நான்கு வித மனப்பான்மைகளைக் கொள்ள வேண்டும். நல்ல பொருளாக இருந்தால் நட்பும், துன்பத்தில் இரக்கமும், நல்ல விஷயத்தில் மகிழ்ச்சியும், தீய விஷயங்களில் அலட்சியமும் கொள்ள வேண்டும். நம் முன் வருகின்ற விஷயங்களில் இத்தகைய மனப்பான்மைகளைக் கொள்வது மனத்திற்கு அமைதியைத் தரும். தினசரி வாழ்க்கையில் நமக்கு வருகின்ற சிக்கல்களுள் பலவும் மனத்தை இந்த வழியில் நிறுத்த முடியாததால் ஏற்படுபவையே. உதாரணமாக ஒருவன் நமக்குத் தீமை செய்தால் உடனே நாமும் அவனுக்குத் தீமை செய்ய எண்ணுகிறோம். தீய எதிர்ச்செயல்கள் ஒவ்வொன்றும் நாம் சித்தத்தை அடக்கிப் பழகவில்லை என்பதையே காட்டுகிறது. சித்தம் வெளிவந்து அலைகளாகி, புறப் பொருளை நோக்கிச் செல்லுந்தோறும் நாம் நமது வலிமையை இழக்கிறோம். வெறுப்பாகவோ தீய எண்ணமாகவோ வரும் ஒவ்வோர் எதிரியக்கமும் மனத்தின் ஆற்றலைக் குறைக்கிறது. வெறுப்பு

மற்றும் தீமையாக வெளிப்படுகின்ற ஒவ்வோர் எதிர்ச்செயலும் மனத்திற்கு இழப்பாகிறது. ஒவ்வொரு தீய எண்ணமும் வெறுப்புச் செயலும், எதிர்ச்செயல் எண்ணமும், தடுக்கப்படும்போது மனத்திற்கு அனுகூலமாகிறது. நம்மை நாமே அடக்குவதால் நமக்கு இழப்பு ஒன்றும் இல்லை. மாறாக நாம் எதிர்பார்த்ததற்கு மேல் எல்லையற்ற மடங்கு நன்மையையே அடைகிறோம். ஒவ்வொரு முறை நாம் வெறுப்பையும் கோப உணர்ச்சியையும் அடக்கும்போது அந்த அளவிற்கு நல்ல ஆற்றலைச் சேமிக்கிறோம். அந்த ஆற்றல் உயர்ந்த சக்திகளாக மாற்றப்படுகின்றன.

நீங்கள் எங்கேயோ மலைக்குகைக்குள் புகுந்து உங்களை அடைத்துக் கொள்ளலாம், ஆனால் அங்கே நீங்கள் எண்ணுகின்ற ஒவ்வொரு தீய எண்ணமும் ஒவ்வொரு வெறுப்புணர்ச்சியும் மீண்டும் உங்களிடமே வந்துசேரும்; பன்மடங்கு ஆற்றலுடன் ஏதோவொரு துன்பத்தின் வடிவில் ஒருநாள் உங்களிடமே திரும்பி

வரும். நீங்கள் எழுப்புகின்ற வெறுப்பும் பொறாமையும் கூட்டுவட்டியுடன் உங்களிடமே திரும்பி வந்துசேரும். அவற்றை எந்த ஆற்றலும் தடுக்க முடியாது. அவை உங்களில் எழ ஒருமுறை இடமளித்து விட்டீர்களானால் விளைவை நீங்கள் தாங்கியே தீரவேண்டும்; இதை நினைவில் கொள்வது, தீய செயல்களைச் செய்வதிலிருந்து உங்களைத் தடுக்கும்.

இங்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். யாரையும் வெறுக்கக் கூடாது, அன்புகாட்ட வேண்டும் என்ற நீதிநெறிக் கோட்பாட்டை இந்தக் கருத்து விளக்குவதாக உள்ளது. எப்படியெனில், ஒரு டைனமோவிலிருந்து புறப்படுகின்ற மின்னோட்டம், சுற்றை முடித்து முடிவில் டைனமோவை அடைகிறது என்கிறது நவீனக் கொள்கை. வெறுப்பும் அன்பும் அதுபோல்தான். புறப்பட்ட இடத்திற்கு அவை திரும்பி வந்தே தீரவேண்டும். எனவே யாரையும் வெறுக்காதீர்கள். ஏனெனில் உங்களிடமிருந்து புறப்பட்ட அந்த வெறுப்பு நாளடைவில்

உங்களிடமே திரும்பிவரும். நீங்கள் அன்பு காட்டினால், அந்த அன்பும் சுற்றினை முடித்துவிட்டு உங்களிடம் திரும்பிவரும். ஒருவனது இதயத்திலிருந்து புறப்படுகின்ற வெறுப்பு முழுவேகத்தில் அவனிடம் திரும்பி வரவே செய்கிறது. இதை யாரா லும் தடுக்க முடியாது. அதுபோலவே அன் பின் ஒவ்வொரு வெளிப்பாடும் அவனிடம் வந்து சேர்கிறது.

பொறாமையின்மையே பரம ரகசியம். உன் தோழர்களின் கருத்துக் களுக்கு விட்டுக் கொடுத்து, அவர்களை அரவணைத்துச் செல்ல முயற்சி செய். முழு ரகசியமும் இதுவே. தைரியமாகப் போராடு. வாழ்நாள் குறுகியது. மகத்தான ஒன்றிற்காக அதைத் தியாகம் செய்.

நம்மை முதலில் மாற்றிக் கொள்வோம்

புறவுலகை ஆள்வது அகவுலகம்தான் என்பதை முன்பு கண்டோம். உள்ளம் மாறி னால் உலகமும் மாறிவிடும். உங்கள் உள்ளம் தூய்மையானால் உலகமும் தூய தாகியே தீரவேண்டும். இந்த உண்மையை

உலகுக்குக் கூற வேண்டிய அவசியம் முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் விவகாரங்களில் இப்பொழுது அதிக அக்கறைகொள்ளத் தொடங்கிவிட்டோம்; ஆனால் நம்மைப் பற்றிய விஷயங்களில் நமது கவனம் குறைந்துகொண்டே வருகிறது.

நாம் மாறினால் உலகம் மாறும். நாம் தூயவர்களானால் உலகமும் தூய்மையாகும். மற்றவர்களிடம் நான் ஏன் தீமையைக் காண்கிறேன் என்பதுதான் கேள்வி. நான் தீயவனாக இல்லாமல் பிறரிடம் தீமை காண முடியாது. நான் பலவீனனாக இல்லாமல் துன்பப்பட முடியாது. நான் குழந்தையாக இருக்கும்பொழுது எனக்குத் துன்பம் தந்தவை இப்போது துன்பம் தருவதில்லை. நான் மாறிவிட்டேன், புறப் பொருட்களும் மாறிவிட்டன. வேதாந்தம் இதைத்தான் சொல்கிறது.

இவ்வாறு தனக்குத்தானே கட்டுப்பாடு உள்ளவன்மீது வெளியிலுள்ள எதுவும் ஆதிக்கம் செலுத்த முடியாது.

அவனிடமிருந்து அடிமைத்தனம் விடை பெற்றுவிடுகிறது. அவனது மனம் சுதந்திர மாகிவிட்டது. அத்தகையவன் மட்டுமே இந்த உலகில் நன்றாக வாழ்வதற்குத் தகுதி உடையவன்.

மனிதர்கள் பொதுவாக உலகத்தைப் பற்றி இரண்டு கருத்துக்களைக் கொண் டிருப்பதைக் காண்கிறோம். சிலர் துன்ப நோக்குக் கொண்டவர்கள்; 'இந்த உலகம் எவ்வளவு கொடூரமானது! எத்தனை கொடியது!' என்று அவர்கள் கூறுகிறார்கள். மற்றும் சிலர் இன்பநோக்குக் கொண்ட வர்கள்; அவர்கள், 'உலகம் எவ்வளவு அழகானது! எத்தனை அற்புதமானது!' என்கிறார்கள். மனத்தைக் கட்டுப்படுத் தாதவர்களுக்கு இந்த உலகம் முழுக்க முழுக்கத் தீமை நிறைந்ததாக அல்லது நன்மை, தீமை இரண்டும் சேர்ந்ததாகவா வதுதான் காட்சியளிக்கும். நாம் நம் மனத் திற்கு எஜமானர் ஆகும்போது இதே உலகம் இன்பமயமாகிவிடுகிறது. அதன் பின் நன்மை தீமை என்ற நிலையில் எதுவும் நம்மைப் பாதிக்காது; எல்லாமே

அவற்றிற்குரிய சரியான இடத்தில், எப்போதுமே இயைபாக இருப்பதை நாம் உணர்வோம்.

அன்பு, அறம், புனிதம் இவை நம்மிடம் வளருந்தோறும் அவற்றை வெளியிலும் அதிகமாகக் காண்போம். பிறரைக் கண்டிப்பதெல்லாம் நம்மை நாமே கண்டித்துக் கொள்வதுதான். உன்னை முதலில் சரிப்படுத்திக்கொள் (அது உன்னால் இயலும்), உலகம் உனக்காகத் தன்னை இணக்கமாக்கிக் கொள்ளும். ஒரு துளி நீர், பிரபஞ்சத்தையே தாங்க வல்லது என்ற கோட்பாடு (Hydrostatic Paradox) போன்றது இது. நாம் அகத்தில் எதுவாக இல்லையோ அதைப் புறத்திலும் காண முடியாது. பெரிய எந்திரத்திற்கும், அதன் சிறிய எந்திர அமைப்பிற்கும் உள்ள தொடர்பைப் போன்றதே பிரபஞ்சத்திற்கும் நமக்கும் உள்ள தொடர்பு. சிறிய எந்திரத்தில் நேர்கின்ற கோளாறு, பெரிய எந்திரத்தில்தான் கோளாறு ஏற்பட்டு விட்டதாக நம்மைக் கற்பனை செய்யத் தூண்டுகிறது.

உலகில் உண்மையினுடைய முன்னேற்றத்தின் ஒவ்வோர் அடியும் அன்பின் ஆற்றலாலேயே ஏற்பட்டுள்ளது. குறை கூறுவது ஒருபோதும் நன்மை பயக்காது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அறிஞர்கள் இதனைச் சோதித்தும்விட்டனர். கண்டனத்தால் எதையும் சாதிக்க முடியாது.

முழுப் பொறுப்பும் நமதே

நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அப்படி நம்மைச் செய்துகொள்வதற்கான ஆற்றலும் நம்மிடம் உள்ளது. இப்போதைய நமது நிலைக்கு முன்வினைப் பயன்களே காரணம் என்றால், எதிர்காலத்தில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்பது இப்போதைய நமது செயல்களுக்கு ஏற்பவே அமையும் என்பதும் உறுதி. எனவே செயல்புரிவது எப்படி என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நமது தகுதிக்கு ஏற்றதையே நாம் பெறுகிறோம். நமக்கு வர வேண்டிய துன்பங்கள் மட்டுமே வருகின்றன. ஆணவத்தை விட்டு இதைத் தெரிந்து கொள்வோம். நமக்கென்றில்லாத எந்த அடியும் ஒருபோதும் நம்மைச் சேராது. நமக்கு நாமே செய்துகொள்கின்ற துன்பத் தைத் தவிர வேறு எந்தத் துன்பமும் நம்மை அணுகாது. இதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். உங்களையே ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கு வந்த துன்பங்கள் எல்லாமே நீங்கள் அதற்காக உங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டதால்தான் வந்தது என்பதை அறிந்துகொள்வீர்கள். ஒரு பாதியை நீங்கள் செய்தீர்கள், புற உலகம் மறுபாதியைச் செய்தது இவ்வாறே துயரம் வந்தது.

இந்த ஆராய்ச்சியிலிருந்து ஒரு நம்பிக்கைக் கிரணமும் வருகிறது. 'என்னால் புறவுலகை அடக்க முடியாது. ஆனால் என்னுள், எனக்கு அருகில் இருக் கின்ற எனது சொந்த உலகம் என் கட்டுப் பாட்டிற்கு உட்பட்டது. தோல்விக்கு

இரண்டும் தேவையானால், என் துயரத்திற்கு இரண்டும் காரணமானால் என் பக்கத்திலிருந்து நான் ஒத்துழைக்க மாட்டேன். அப்போது துயரம் எப்படி வரும்? உண்மையிலேயே என்னை நான் அடக்கினால், துயரம் ஒருபோதும் வராது' என்பதே அந்த நம்பிக்கை.

எல்லா பொறுப்பையும் நாமே சுமக்க நேர்வதால் நாம் சிறந்த முறையில், நம்முடைய எல்லா சக்தியையும் திரட்டி இயங்குகிறோம். நம்மை இவ்வளவு சிறப்பாகச் செயல்பட வைக்க வேறெந்தக் கருத்தாலும் முடியாது. உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு சவால் விடுகிறேன். ஒரு சிறு குழந்தையை உங்கள் கையில் கொடுத்தால், நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? அந்தக் கண நேரத்திற்கு உங்கள் வாழ்க்கையே மாறிவிடும். நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும், அந்த நேரத்திற்கு, சுயநலமற்றவர்களாக ஆகியே தீர வேண்டும். பொறுப்பு திணிக்கப் பட்டால் உங்கள் தீய எண்ணங்கள் எல்லாம் மறைந்துவிடும், உங்களுடைய

குணம் முழுவதுமே மாறிவிடும். பொறுப்பு முழுவதும் நம் தலையில் விழும்போது நமது சிறந்த தன்மைக ளெல்லாம் வெளிப்படத் தொடங்கி விடும். இருட்டில் தடுமாறிக்கொண்டு நாம் தேடிச் செல்வதற்கு ஒருவர் இல்லாத போது, நாம் குற்றம் சாட்டுவதற்கு ஒரு சாத்தான் இல்லாதபோது, நம்முடைய சுமைகளைச் சுமப்பதற்கு ஒரு சகுணக் கடவுள் இல்லாதபோது எல்லாவற்றிற்கும் நாமே பொறுப்பாளியாக இருக்கும் அந்த நிலையில்தான், நாம் மிக உயர்ந்த, மிகச் சிறந்த நிலைக்கு உயரத் தொடங்குவோம். என்னுடைய விதிக்கு நானே காரண மாகிறேன். எனக்கு நன்மையை நானே தான் தேடிக் கொள்ள வேண்டும். எனக்குத் தீமை விளைவித்துக் கொள்பவனும் நானேதான்.

இந்த வாழ்க்கை ஒரு கடினமான உண்மை. அது வலிமை பெற்றதாக இருந் தாலும், அதன்மூலம் வழியைக் கண்டு பிடித்துத் தைரியமாகச் செல்லுங்கள். எதையும் பொருட்படுத்தாதீர்கள். ஆன்மா

வலிமை வாய்ந்தது. சாதாரண தெய்வங்களின்மீது அது பொறுப்பைச் சுமத்துவதில்லை. நம்முடைய அதிர்ஷ்டங்களுக்கு நாமே காரணம். நாமே நம்முடைய துன்பங்களுக்கும் காரணம். நமது நன்மை தீமைகளை நாமே உண்டாக்கிக் கொள்கிறோம். நாமே நம் கைகளால் கண்களை மறைத்துக்கொண்டு, 'இருட்டாக இருக்கிறதே' என்று கதறுகிறோம். கைகளை விலக்கிவிட்டு ஒளியைப் பாருங்கள். நீங்கள் ஏற்கனவே முழுமை பெற்றவர்கள், ஒளி பெற்றவர்கள்.

பிரச்சினைக்கு இது ஒன்றுதான் தீர்வு. அந்தோ, பிறர்மீது பழி போடுபவர்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள். பொதுவாக அவர்கள் துன்பப்படுபவர்களாக, நம்பிக்கை இழந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தவறுகளின் மூலமாகவே இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆனால் பிறர்மீது பழி போடுகிறார்கள். இது அவர்களின் நிலைமையை மாற்றுவதில்லை, அவர்களுக்கு எந்த

விதத்திலும் உதவுவதில்லை. பிறர்மீது பழிபோட முயல்வது அவர்களை மேலும் பலவீனப்படுத்துகிறது. ஆகவே உங்கள் தவறுகளுக்குப் பிறரைப் பழி சொல்லா தீர்கள். சொந்தக் காலிலேயே நில்லுங்கள், பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

'நான் அனுபவிக்கும் இந்தத் துன்பத் திற்கு நானே காரணம். ஆகவே நானேதான் இதற்குப் பரிகாரமும் தேடிக் கொள்ள வேண்டும்' என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நான் படைத்ததை நானே அழிக்க முடியும். மற்றவர்கள் படைத்ததை என்னால் அழிக்க முடியாது. ஆகவே எழுந் திருங்கள், உறுதியுடனும் தைரியத் துடனும் இருங்கள். பொறுப்பு முழுவதையும் உங்கள் தோளிலேயே சுமந்துகொள்ளுங்கள். உங்கள் விதிக்கு நீங்களே காரணம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் விரும்புகின்ற வலிமையும் உதவியும் உங்களுள்ளேயே இருக்கின்றன. உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். போனது போகட்டும். எல்லையற்ற எதிர்

காலம் உங்கள் முன்னே இருக்கிறது. உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வொரு செயலும் அதற்கு ஏற்ற பலனை உண்டாக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தீய செயல்களும் தீய எண்ணங்களும் புலிகளைப்போல் நம்மீது பாயத் தயாராக இருக்கின்றன. அதோடு கூடவே நல்எண்ணங்களும் நற்செயல்களும் பல்லாயிரக்கணக்கான தேவதூதர்களைப் போல் நம்மைக் காப்பாற்ற எப்போதும் தயாராக இருக்கின்றன.

எப்படி வேலை செய்வது?

செயலுக்காகச் செயல்புரிய வேண்டும். உலகிற்கு உண்மையாகவே வளமை சேர்க்கின்ற சிலர் எல்லா நாடுகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் செயலுக்காகவே செயல் புரிகிறார்கள். பெயர், புகழ், ஏன், சொர்க்கத்தைப்பற்றிக்கூட அவர்கள் கவலைப்படுவதில்லை. நன்முயற்சி என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

மற்றும் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் இன்னும் உயர்ந்த லட்சியங்களைக் கைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்கிறார் கள், மனித சமுதாயத்திற்கு உதவுகிறார் கள். ஏனெனில் இவர்கள் நன்மை செய்வதி லும் அன்பு காட்டுவதிலும் நம்பிக்கை கொண்டவர்கள். பொதுவாக, பெயர்புகழுக் காகச் செய்யப்படும் செயல்கள் உடனடி யாகப் பலனளிப்பதில்லை. அந்தப் பெயரும் புகழும் பெரும்பாலும் நாம் வாழ்க்கையையே கடந்துவிட்ட, நமது வயது முதிர்ந்த காலத்தில்தான் வருகிறது.

சுயநல நோக்கம் எதுவும் இல்லாமல் ஒருவன் வேலை செய்தால் அவனுக்குக் கிடைக்கும் பலன் எதுவுமே இல்லையா? இருக்கிறது. உண்மையில் மிகவுயர்ந்த பலனை அடைபவன் அவன்தான். சுயநல மின்றி வேலை செய்வதுதான் மிகுந்த பலனைத் தருவது, ஆனால் அவ்வாறு வேலை செய்வதற்கான பொறுமை மக்களிடம் இல்லை. பலன் கருதாமல் செயல்புரிவது உடல்நலத்திற்கும் மிகுந்த நன்மை செய்கிறது. அன்பு, உண்மை,

சுயநலமின்மை இவையெல்லாம் ஒழுக்கம் பற்றிய வெறும் பேச்சுக்கள் அல்ல; அவை நம்மிடம் மிக உன்னதமான லட்சியத்தை உருவாக்குகின்றன. ஏனெனில் அவற்றிலிருந்துதான் அளவற்ற ஆற்றல் வெளிப்படுகிறது.

வேதாந்தத்தின் லட்சியமான உண்மையான செயல்நிலை என்பது, என்ன நடந்தாலும் சமநிலை குலையாத, கலங்காத, நிரந்தரமான அமைதியுடன் இணைந்தே இருக்கும். இதுவே செயல் புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த கருத்து என்பதை நமது அன்றாட வாழ்க்கை அனுபவத்தின்மூலம் நாம் உணரலாம்.

செயல்புரிவதற்குப் பொதுவாக நாம் கொள்கின்ற ஆசைகூட இல்லாமல் எப்படிச் செயல்புரிய முடியும் என்று என்னிடம் பலரும் அவ்வப்போது கேட்டதுண்டு. சிறு வயதில் நானும் அப்படியேதான் நினைத்திருந்தேன். ஆனால் வயதாக ஆக, அனுபவம் வளர வளர அது உண்மை இல்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆசை குறைகின்ற

அளவிற்கு நாம் நன்றாகச் செயல்புரி வோம். அமைதி நம்மிடம் மிகுந்தோறும் நமக்கு நன்மை பெருகுகிறது; நம்மால் அதிகம் செயல்புரிய முடிகிறது. உணர்ச்சி களைக் கட்டவிழ்த்து விடுமளவிற்கு நாம் ஆற்றலை இழக்கிறோம், நமது நரம்புகள் தளர்வுறுகின்றன, மனம் சஞ்சலத்திற்கு உள்ளாகிறது, மிகக் குறைந்த அளவே வேலை செய்ய முடிகிறது. வேலை செய்யச் செலவிட்டிருக்க வேண்டிய ஆற்றலை, ஒன்றுக்கும் பயன்படாத வெறும் உணர்ச்சிப் பெருக்கில் வீணாக்கு கிறோம். மனம் ஒருமுகப்பட்டு, அமைதி யாக இருக்கும்போதுதான் அதன் ஆற்றல் முழுவதும் நற்செயல் புரியப் பயன்படு கிறது. இந்த உலகம் தந்த செயல்வீரர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் அவர்கள் அற்புத மான அமைதி மிக்கவர்கள் என்பது தெரிய வரும். எதனாலும் அவர்களது சமநிலை யைக் கலைக்க முடிவதில்லை. அதனால் தான் கோபப்படும் ஒரு மனிதனால் அதிக அளவு வேலை செய்ய முடியாமல் போய்விடுகிறது; எதற்கும் கோபப்படாத

மனிதன் சிறப்பான பணிகளைச் செய்ய முடிகிறது. கோபத்திற்கோ வெறுப்பிற்கோ ஏதாவது ஆசைகளுக்கோ இடம் கொடுப்பவனால் செயல்புரிய முடியாது. அவன் தன்னைத்தானே சிதைத்துக் கொள்கிறானே தவிர உண்மையாக எதையும் செய்து முடிப்பதில்லை. அமைதியான, மன்னிக்கக்கூடிய, சமநோக்குடைய, நிலைகுலையாத மனம் உடையவனே மிக அதிக அளவு செயல்புரிய முடிகிறது.

'எவ்வாறு வேலை செய்ய வேண்டும் என்று தெரிந்துகொள்வதால் என்ன பயன்? ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் ஏதாவது ஒரு வழியில் வேலைகள் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்!' என்று கேட்கலாம். ஆனால் ஆற்றல்களை வீணடிப்பது என்று ஒன்று இருக்கிறது. சாதுரியமாகவும், ஒரு விஞ்ஞானம்போல் நுணுக்கமாகவும் செயல்புரிவதே கர்மயோகம் என்று பகவத்கீதை கூறுகிறது. எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிந்து செய்வதன்மூலம் ஒருவன் பெரிய பலன்களை அடைவான்.

அனைத்து செயல்களும் நம் மனத்துள் ஏற்கனவே இருக்கின்ற ஆற்றலை வெளியே கொண்டு வருவதற்கான, ஆன்மாவை விழிப்புணர்த்துவதற்கான முயற்சிகள் மட்டுமே என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆற்றல் மனிதனுள் இருக்கிறது. அதுபோலவே அறிவும் அவனுள்ளேயே இருக்கிறது. அவற்றை வெளியே கொண்டு வருவதற்காக, இந்த மாமனிதர்களை விழிப்புணர்த்துவதற் காகத் தரப்படும் அடி போன்றதே பல் வேறு செயல்கள்.

செயலற்றிருப்பதை எல்லா வகையி லும் தவிர்க்க வேண்டும். செயல்நிலை என்றாலே எதிர்த்தல் என்பதுதான் எப் போதும் பொருள். மனம் மற்றும் உடல் சம்பந்தமான எல்லா தீமைகளையும் எதிர்த்துப் போரிடு. எதிர்ப்பதில் வெற்றி பெற்ற பின்னரே அமைதி வரும். 'யாரை யும் வெறுக்காதே, தீமையை எதிர்க்காதே' என்றெல்லாம் சொல்வது மிகவும் எளிது. ஆனால் பொதுவாக அதைப் பின்பற்றி னால் எப்படியிருக்கும் என்பது நமக்குத்

தெரிந்ததே. சமுதாயத்தின் கண்கள் நம்மீது இருக்கும் போது நாம் பெரிய அஹிம்சா வாதி போல் நடிக்கலாம். ஆனால் அந்த நேரம் முழுவதும் நமது இதயம் அரித்துக் கொண்டிருக்கும். அஹிம்சையின் விளை வாக வருகின்ற அமைதியை ஒருசிறிதுகூட நாம் அனுபவிக்கவில்லை. இதைவிட எதிர்ப்பது நல்லதென நமக்குத் தோன்று கிறது. நீ பணம் சேர்க்க ஆசைப்படுகிறாய். அதேவேளையில் பணத்தைக் குறிக் கோளாக உடையவனை உலகம் முழு வதும் கொடியவன் என்று நினைக்கிறது என்பதை அறிந்தால் பணத்தைச் சேர்ப் பதற்கான போராட்டத்திலும் ஒருவேளை இறங்கத் துணிய மாட்டாய். ஆனால் உன் மனமோ பணம் பணம் என்றே இரவும் பகலும் அலைந்து கொண்டிருக்கும். இது கபடத்தனம்! இதனால் எந்தப் பலனும் இல்லை. உலகத்தில் குதித்துப் போராடு, பட வேண்டிய வேதனைகளையெல்லாம் படு! இன்பங்களையெல்லாம் அனுபவி! அதன்பிறகே துறவு வரும்.

எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பவனால் எந்தக் காரியமும் செய்ய முடியாது. உண்மை யானது, நல்லது என்று நீ எதனைப் புரிந்துகொண்டாயோ அதனை உடனே நிறைவேற்று. எதிர்காலத்தில் இது வருமா, இது வராமல் போகுமா என்று கணக்குப் பார்ப்பதில் என்ன பயன்? வாழ்க்கை மிகவும் குறுகியது. எதிர்காலத்தில் என்ன நடக்கும், என்ன பலன் விளையும் என்றெல்லாம் கணக்கிட்டுக் கொண்டிருந் தால் எதையாவது சாதிக்க முடியுமா? கடவுள் ஒருவர்தான் பலன்களைத் தருபவர். அதை அவரிடம் விட்டுவிட்டு எல்லா வேலைகளையும் செய். பலன் களைக் கணக்கிடுவதில் நீ என்ன பெறப் போகிறாய்? அந்த வழியைப் பின் பற்றாதே. எப்போதும் வேலை செய்து கொண்டே இரு.

பலன் கருதி வேலை செய்பவன்தான் தனக்கென்று வாய்த்த கடமையைப்பற்றிக் குறைபட்டுக் கொள்வான். ஆனால் பலனில் பற்றில்லாதவர்களுக்கு எல்லா

வேலைகளுமே ஒரேபோல் நல்லவை தாம்; சுயநலத்தையும் புலனின்ப நாட்டத்தையும் அழித்து ஆன்ம சுதந்திரம் பெறுவதற்குத் தகுந்த கருவிகள்தாம்.

நாம் எல்லோருமே நம்மைப்பற்றி மிகப் பெரிதாக எண்ணிக் கொள்கிறோம். நமது விருப்பத்தைவிட, தகுதிக்கு ஏற்பவே நமக்குக் கடமைகள் வந்து சேர்கின்றன. போட்டி பொறாமையை எழுப்புகிறது, இரக்கத்தை அழித்துவிடுகிறது. முணுமுணுப்பவர்களுக்கு எல்லா கடமைகளுமே வெறுப்பானவைதான், ஏதுவுமே அவர்களுக்குத் திருப்தி தராது. அவர்களின் வாழ்க்கையே தோல்விதான். நமக்கென வாய்க்கின்ற கடமைகளை எப்போதும் தயாரான முழுமனத்துடன் செய்து கொண்டே போவோம். அப்போது நிச்சயம் ஒளியைக் காண்போம்.

எனவே எல்லாவற்றிலும் இறைவனை இணைத்துச் செயல்புரியுங்கள் என்று வேதாந்தம் சொல்கிறது. வாழ்க்கையைத் தெய்வீகமாக்கி, தெய்வமாக ஆக்கி, இடைவிடாமல் வேலை

செய்யுங்கள். நாம் செய்ய வேண்டியதும், கேட்டுப் பெற வேண்டியதும் இவ்வளவு தான் என்பதைத் தெரிந்துகொள்ள வேண் டும். எங்கும் இறைவன் இருக்கிறார். அவரைத் தேடி நாம் எங்கே போவது? ஒவ்வொரு செயலிலும் ஒவ்வோர் எண்ணத்திலும் ஒவ்வோர் உணர்ச்சியிலும் அவர் ஏற்கனவே உள்ளார். இதை உணர்ந்து செயல்புரிய வேண்டும். அது ஒன்றுதான் வழி. வேறு வழியே இல்லை. அப்போதுதான் நமது கர்மபலன்கள் நம்மைக் கட்டுப்படுத்தாது.

போலி ஆசைகள்தான் நமது எல்லா தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம் என்பதைப் பார்த்தோம். அந்த ஆசை களையே இறைவனின்மூலம் தெய்வீக மாக்குங்கள், தூய்மைப்படுத்துங்கள். அதன்பின் அவை துன்பத்தையோ தீமையையோ கொண்டு வராது. இந்த ரகசியத்தை அறியாதவர்களுக்கு, அதை அறிந்துகொள்ளும்வரை, உலக வாழ்க் கையே நரகமாகத்தான் இருக்கும். தங்களுக்கு உள்ளும், தங்களைச் சுற்றியும்,

எல்லா இடங்களிலும் எல்லையற்ற ஆனந்தச் சுரங்கம் இருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. அவர்கள் இன்னும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. நரக வாழ்க்கை என்பது என்ன? அறியாமை தான் நரகம் என்கிறது வேதாந்தம்.

மனத்திற்குப் பிடித்த வேலையை பரம முட்டாள்கூட செய்துவிடலாம். ஆனால் எந்த வேலையையும் தனக்குப் பிடித்ததாக மாற்றி அமைத்துக் கொள் பவனே புத்திசாலி. எந்த வேலையும் அற்ப மானதல்ல. இந்த உலகில் ஒவ்வொன்றும் ஓர் ஆலவிதை போன்றது; அது கடுகு போல் தோன்றினாலும், தன்னுள் பிரம் மாண்டமான ஆலமரத்தை அடக்கிக் கொண்டிருக்கிறது. இதை உணர்ந்து எல்லா வேலையையும் உண்மையில் பெருமை உடையதாகச் செய்வதில் வெற்றி பெறுபவனே உண்மையில் புத்திசாலி.

எந்தவகைக் கடமையையும் அலட்சியமாக நினைக்கக் கூடாது. கீழான வேலை செய்கின்ற ஒருவன், அதன்

காரணமாக மட்டுமே உயர்ந்த வேலை செய்கின்ற ஒருவனை விடத் தாழ்ந்தவன் ஆகிவிட மாட்டான். ஒருவன் செய்கின்ற செயலின் தன்மையை வைத்து அவனை மதிப்பிடக் கூடாது; அந்தச் செயல்களை அவன் எப்படிச் செய்கிறான் என்பதைக் கொண்டே அதைத் தீர்மானிக்க வேண் டும். செய்கின்ற முறையும் திறமையுமே ஒருவனைக் கணக்கிடும் அளவு கோலாகும். தொழிலைப் பொறுத்தவரை, நாள்தோறும் பயனற்றவற்றைப் பேசு கின்ற பேராசிரியரைவிட, உறுதியும் அழகும் வாய்ந்த ஒரு செருப்பை மிகக் குறைந்த நேரத்தில் உருவாக்குகின்ற தொழிலாளி எவ்வளவோ உயர்ந்தவன்.

கடமை ஒவ்வொன்றும் புனித மானது. அதை பக்தியுடன் செய்வது மிக உயர்ந்த தெய்வ வழிபாடு. மாயையில் சிக்கி, அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கின்ற பத்த ஆன்மாக்கள், அதாவது கட்டுப்பட்ட உயிர்கள் ஞான ஒளியும் விடுதலையும் பெற இத்தகைய செயல்கள் கட்டாயமாகப் பேருதவி புரியும்.

நம் கைக்கு எட்டிய, நம்மால் இயன்ற கடமைகளை நன்றாகச் செய்வதால் நம்மை நாம் அதிக வலிமையுடையவர்களாக ஆக்கு கிறோம். இந்த வலிமையை இவ்வாறே வளர்த்தால், பெருமை மிக்க இந்த வாழ்க் கையிலும் சமூகத்திலும் எல்லோராலும் விரும்பத்தக்க நிலையை, பெறுதற்கரிய நிலையைப் படிப்படியாக அடையலாம்.

முதலாளியைப் போல் வேலை செய்தல்

எஜமானனைப்போல் வேலை செய்ய வேண்டும், அடிமையைப் போல் அல்ல என்பதே இந்த உபதேசத்தின் சுருக்கம். இடைவிடாமல் வேலை செய். ஆனால் அடிமையைப்போல் வேலை செய்யாதே. மனிதர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதை நீ பார்த்ததில்லையா? முற்றிலும் ஓய்ந்திருக்க யாராலும் முடிவதில்லை. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் அடிமைகளைப்போல் வேலை செய்கிறார் கள். பலன் துன்பம்தான். இவையெல்லாம் சுயநலம் சார்ந்த வேலை. சுதந்திரத்தின் மூலமாகச் செயல்புரி, அன்பின் வழியாக வேலை செய்!

'அன்பு' என்ற வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம். சுதந்திரம் இல்லாதவரையில் அன்பு தோன்றுவதில்லை. அடிமையிடம் உண்மையான அன்பு இருக்க முடியாது. நீங்கள் ஓர் அடிமையை விலைக்கு வாங்கி, சங்கிலியில் கட்டி, உங்களுக்காக வேலை செய்யச் சொல்லுங்கள்; அவன் மாடு போல் வேலை செய்வான். ஆனால் அவனிடம் அன்பு இருக்காது. நாமும் உலகப் பொருட்களுக்காக அடிமைபோல் வேலை செய்தோமானால், நம்மிடம் அன்பு இருக்க முடியாது; நாம் செய்யும் வேலையும் உண்மையான வேலையாகாது. உறவினர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் செய்யப்படுகின்ற வேலைகளும் சரி, நமக்காகவே செய்யப்படுகின்ற வேலையும் சரி, இது உண்மையே. சுயநலத்துடன் செய்யும் வேலை அடிமை வேலை. இதோ ஒரு சோதனை: அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வரும். அமைதியையும் ஆசிகளையும்

விளைவாகக் கொண்டு வராத அன்புச் செயல்கள் எதுவுமே இல்லை.

சுதந்திர உணர்வுடனும் அன்புடனும் உழைக்கின்ற ஒருவன் பலனைப்பற்றிக் கவலைப்படவே மாட்டான். அடிமையோ சவுக்கடி வேண்டுகிறான்; சேவகன் கூலி கேட்கிறான். வாழ்க்கை முழுவதிலும் இப்படித்தான் நிகழ்கிறது.

பொதுவாழ்வை எடுத்துக்கொள் ளுங்கள். சொற்பொழிவாற்றும் ஒருவன் கைதட்டலை வேண்டுகிறான்; சிறிது கூச்சலையும் குழப்பத்தையும் விரும்புகி றான். அவனை ஒரு மூலையில் உட்கார வைத்தால் அது அவனைக் கொல்வதற்கு ஒப்பாகிவிடும். அவனுக்கு இவை தேவை யாக உள்ளன. இது அடிமைத்தனம். இத்தகைய நிலையில் வேலைக்கு ஏதோ ஒரு பலனை விரும்புவது அவர்களின் இயல்பாகிவிடுகிறது.

அடுத்ததாக, தொழில் செய்து உயிர் வாழ்பவன். இவனுக்குச் சம்பளம் வேண் டும்; ‘நான் உழைப்பைக் கொடுக்கிறேன்,

நீ சம்பளத்தைக் கொடு' என்னும் பேரம் இது.

'வேலைக்காகவே நான் வேலை செய்கிறேன்' என்று சொல்வது சுலபம்.

நாம் வேலை செய்ய வேண்டும். பொய்யான ஆசைகளால் அலைக்கழிக்கப் படுகின்ற சாதாரண மனித குலத்திற்கு செயல் என்பதுபற்றி என்ன தெரியும்? உணர்ச்சிகளாலும் புலன்களாலும் ஆட்டி வைக்கப்படுகின்ற மனிதனுக்குச் செயல் என்பதுபற்றி என்ன தெரியும்? சொந்த ஆசைகளால் தூண்டப்படாதவன்தான், சுயநலம் துளியும் இல்லாதவன்தான் செயல்புரிய முடியும். தனக்கென்று சுய நோக்கம் எதுவும் இல்லாதவன்தான் வேலை செய்ய முடியும். லாபம் கருதாத வன்தான் வேலை செய்ய முடியும்.

உலகிற்கு உதவி புரிதல்

மற்றவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்பதன் பொருள், பிறருக்கு நாம் உதவ வேண்டும், உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் என்பதே. நாம்

எதற்காக உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகத்திற்கு உதவுவதற்காக, ஆனால் உண்மையில் நமக்கே உதவுவதற்காக. நாம் எப்போதும் உலகத்திற்கு உதவ முயன்று கொண்டே இருக்க வேண்டும். அது ஒன்றே நமது மிகவுயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும். நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்தோமானால், உலகிற்கு நம் உதவி சிறிதுகூடத் தேவையில்லை என்பதைக் காணலாம். நீங்களோ நானோ வந்து உதவி செய்வோம் என்பதற்காக இந்த உலகம் படைக்கப்படவில்லை. 'அழகிய இந்த உலகம் மிகவும் நல்லது. ஏனெனில் நாம் பிறருக்கு உதவி செய்வதற்கான நேரத்தையும் வாய்ப்பையும் இது தருகிறது' என்று ஒரு சொற்பொழிவில் படித்தேன். கேட்கும்போது உணர்ச்சிகரமாகத்தான் இருக்கிறது. ஆனால் உலகத்திற்கு நம் உதவி தேவைப்படுகிறது என்று சொல்வது தெய்வ நிந்தனை ஆகாதா? உலகில் துயரம் மிகுந்திருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. நாம் சென்று பிறருக்கு உதவி செய்வதே

செய்யத்தக்கவற்றுள் சிறந்தது. எனினும் பிறருக்கு உதவுவது என்பது நமக்கே நாம் உதவிக் கொள்வதுதான் என்பதை இறுதியில் உணர்வோம்.

என்றாலும் நாம் நல்லதையே செய்ய வேண்டும். பிறருக்கு உதவுவது என்பது ஒரு பேறு என்ற எண்ணம் நமக்கு எப்போதும் இருக்குமானால், நன்மை செய்வதற்கான ஆசை மிகவும் ஆற்றல் வாய்ந்த தூண்டு சக்தியாகிவிடும். ஐந்து காசுகளைக்கையில் எடுத்துக்கொண்டு, உயரமான மேடையில் நின்று கொண்டு, 'பிச்சைக்காரா, இதோ' என்று கூறாதீர்கள். அவன் இருந்ததால் தானே அவனுக்குத் தானம் செய்து, அதன் மூலம் உங்களுக்கு நீங்களே உதவ முடிந்தது என்று அவனிடம் நன்றியுடன் இருங்கள். பெற்றுக் கொள்பவனல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன். உங்கள் தானத்திறத்தையும் இரக்கத்தையும் இந்த உலகத்தில் செயல்படுத்தி, அதன்மூலம் நீங்கள் தூய்மையும் நிறைநிலையும் அடைவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி உடையவர்களாக இருங்கள்.

''நான்'' என்று நீ உணர்கின்ற இந்த உடம்பைப் பிறர் சேவைக்காக ஈடுபடுத்தும்போது ''நான்'' என்னும் நினைப்பை மறக்கிறோம். இறுதியில் உடம்பை நாமாகக் கருதாத நிலை வந்துவிடும். நீ எவ்வளவு ஒருமைப்பாட்டுடன் பிறரது நன்மையை நாடுகிறாயோ, அவ்வளவிற்கு உன்னை நீ மறப்பாய். இவ்வாறு வேலையால் படிப்படியாக உன் மனம் தூய்மை அடையும். அப்போது உன் ஆன்மாவே எல்லா உயிர்களிலும் எல்லா பொருட்களிலும் இருப்பதை உணர்வாய். இவ்வாறு பிறருக்கு நன்மை செய்வது உங்கள் ஆன்மாவை நீங்கள் உணர்வதற்கான ஒரு வழியாக அமைகிறது. எனவே செயல் புரிவதும் ஆன்மீகச் சாதனைகளுள் ஒன்று என்பதைத் தெரிந்துகொள். செயலின் லட்சியமும் ஆன்மாவின் வெளிப்பாடு தான்.

நீங்கள் ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒன்றைக் கொடுத்து, அதற்குப் பிரதியாக எதையுமே, நன்றியைக்கூட, எதிர்பார்க்காமல் இருந்தீர்களானால் அவன் நன்றி

மறந்தாலும் உங்களுக்குத் துன்பம் வராது. ஏனெனில் நீங்கள் எதையும் எதிர்பார்க்க வில்லை, பிரதிபலனாக எதையும் பெறும் உரிமை உங்களுக்கு உண்டென்று ஒரு போதும் நீங்கள் எண்ணவில்லை. அவன் எதைப் பெறுவதற்குத் தகுதி இருந்ததோ அதையே கொடுத்தீர்கள். அவனது வினைப் பயன் அதை அவனுக்குப் பெற்றுத் தந்தது, உங்கள் வினைப்பயன், உங்களை, அவ னிடம் அதைச் சேர்ப்பவர்கள் ஆக்கியது. அப்படியிருக்க, எதையோ கொடுத்து விட்டதாக நீங்கள் ஏன் பெருமைகொள்ள வேண்டும். பணம், மற்ற பொருட்கள் போன்றவற்றைக் கொண்டுசெல்லும் சுமைதூக்கி மட்டுமே நீங்கள். உலகம் தன் வினைப்பயன் மூலமே அவற்றைப் பெறுவதற்குத் தகுதியுடையதாக இருக் கிறது. இதில் நீங்கள் எப்படிப் பெருமை கொள்ள முடியும்? நீங்கள் உலகிற்குக் கொடுப்பதில் பெரிதாகச் சொல்லிக் கொள்ள எதுவுமில்லை.

எதையும் வேண்டாதீர்கள். பிரதியாக எதையும் விரும்பாதீர்கள். நீங்கள்

கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுங்கள்; அது உங்களுக்கே திரும்பி வரும். ஆனால் அதைப்பற்றி இப்போது நினைக்க வேண்டாம். அது ஆயிரம் மடங்காகத் திரும்பிவரும். கவனத்தை அதன்மீது செலுத்தக் கூடாது. கொடுக்கும் திறன் உடையவர்களாக இருங்கள், கொடுங்கள், அத்துடன் அது முடியட்டும். முழு வாழ்க்கையுமே கொடுத்தல்மயம், நீங்கள் கொடுக்கும்படி இயற்கை வற்புறுத் தும் என்பதை கற்றுக் கொள்ளுங்கள். ஆதலால் முழுமனத்துடன் கொடுங்கள். இன்றோ நாளையோ நீங்கள் அனைத்தை யும் விடத்தான் வேண்டும். சேமிப்பதற் காக நீங்கள் வாழ்க்கையில் புகுந்தீர்கள், கைகளை இறுக மூடிக்கொண்டே எடுக்க விரும்புகிறீர்கள். ஆனால் இயற்கை உங்கள் தொண்டையைக் கையால் அழுத்தி, உங்கள் கைகளை விரியச் செய் கிறது. விரும்பினாலும், விரும்பாவிட்டா லும் நீங்கள் கொடுத்தேயாக வேண்டும். 'நான் கொடுக்க மாட்டேன்' என்று நீங்கள் சொல்லும் அந்தக் கணமே அடி

விழுகிறது; நீங்கள் காயம் அடைகிறீர்கள். காலப்போக்கில் எல்லாவற்றையும் விட்டு விடும்படி, கட்டாயப்படுத்தப் பெறாத மனிதன் யாரும் இல்லை. இந்த விதியை எதிர்த்துப் போராடும் அளவிற்கு ஒருவன் துயருறுகிறான். நாம் கொடுக்கத் துணி யாததால்தான், இயற்கையின் இந்த மேலான தேவைக்கு இணங்காததால்தான் துயரப்படுகிறோம். காடு அழிகிறது, ஆனால் அதற்குப் பதிலாக சூடு கிடைக் கிறது. கதிரவன் கடலிலிருந்து நீரை முகந்து கொள்வது, அதனை மழையாகத் திரும்ப அளிப்பதற்கே. கொள்வதற்கும் கொடுப் பதற்கும் ஆனதோர் எந்திரம் மட்டுமே நீங்கள். கொள்வது கொடுப்பதற்கே.

எனவே பிரதிபலனாக எதையும் வேண்டாதீர்கள். ஆனால் கொடுக்கும் அளவு பெருகப்பெருக வருவதும் அதிக மாகும். இந்த அறையிலிருந்து காற்றை வெளியேற்றும் அளவு விரைவாகுந் தோறும் வெளியே உள்ள காற்றால் நிரப்பப்படும். ஒரு துவாரமும் விடாமல் எல்லா கதவுகளையும் மூடினால் உள்ளே

இருப்பது அப்படியே இருக்கும். ஆனால் வெளியேயுள்ளது ஒருபோதும் உள்ளே வராது. உள்ளேயிருப்பது தேங்கி நின்று, கெட்டுப்போய், நஞ்சு நிறைந்ததாகி விடும். ஆறு ஓயாமல் கடலிற்குள் பாய்ந்து கொண்டே இருக்கிறது, ஓயாமல் மீண்டும் நிரம்பிக்கொண்டும் உள்ளது. கடலில் புகுவதைத் தடை செய்யாதீர்கள். அப்படிச் செய்கின்ற அந்தக் கணமே மரணம் உங்களைப் பற்றிக்கொள்கிறது.

கல்வி, அறிவு, செல்வம், ஆள்பலம், வலிமை, தைரியம் என்று இயற்கை நமக்குக் கொடுக்கின்ற எல்லாமே பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான். நாம் இதை அடிக்கடி மறக்கிறோம். நமக்குக் கொடுக்கப்படும் பொருட்களின்மீது, 'எனக்கு மட்டும் சொந்தம்' என்ற முத்திரையை இடும் போது நம்முடைய அழிவுக்கு விதையை நாமே விதைக்கிறோம்.

வெற்றி சுயநலமற்றவனுக்கே

சுயநல நோக்கத்துடன் வெளியே செல்கின்ற ஆற்றல்கள் யாவும் சிதறி

வீணாகின்றன. அந்த ஆற்றல் உங்களிடம் திரும்பி வருவதற்கான வழியில்லை. ஆனால் அவற்றின் ஆற்றல் கட்டுப்படுத் தப்படுமானால், அது ஆற்றல் வளர வழிவகுக்கும். இந்தச் சுயக்கட்டுப்பாடு மகத்தான சங்கல்பத்தை உருவாக்குவதற்கு ஏதுவாகும்; ஏசுவையும் புத்தரையும் உருவாக்குகின்ற குணநலனைத் தரும்.

முட்டாள்கள் இந்த ரகசியத்தை அறிவதில்லை, ஆனால் மனிதகுலத்தை ஆள மட்டும் அவர்கள் விரும்புகிறார்கள். வேலைகளைச் செய்துவிட்டுக் காத்திருப் பானேயானால் முட்டாள்கூட உலகம் முழுவதையும் ஒருநாள் ஆளலாம். ஆள வேண்டும் என்னும் முட்டாள்தனமான எண்ணத்தை விட்டுவிட்டுச் சில ஆண்டு கள் காத்திருக்கட்டும்; அந்த எண்ணம் அவனிடமிருந்து முற்றிலுமாக விலகி விடுமானால், அவன் ஒரு மகத்தான ஆற்ற லாக மாறிவிடுவான். சில மிருகங்களால் சில அடி தூரத்திற்கு அப்பால் எதையும் பார்க்க முடியாது. அதுபோல் நம்மில் பெரும்பாலானோருக்கு சில ஆண்டுகளுக்குப்

பிறகு என்ன நடக்கும் என்பதைப் பார்க்க முடிவதில்லை. ஒரு சிறிய வட்டம், அதுவே நமது உலகம். அதைக் கடந்து பார்க்கின்ற பொறுமை இல்லாமல் ஒழுக்கமற்றவர்களாகவும் தீயவர்களாகவும் மாறிவிடுகிறோம். இதுதான் நமது பலவீனம், வலிமையற்ற நிலை.

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம், பாவங்கள் அனைத்திலும் முதற்பாவமாகும். 'நானே முதலில் உண்பேன். மற்றவர்களைவிட எனக்கு அதிகமான பணம் வேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்', 'மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடைய வேண்டும், எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெற வேண்டும்' என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநலமற்றவனோ, 'நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்திற்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்' என்கிறான். இத்தகைய சுயநல

மற்ற தன்மையே மதத்திற்கான உரைகல். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீக வாதி, அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான். அவன் படித்தவனாக இருந் தாலும் படிக்காதவனாக இருந்தாலும், அவன் அறிந்தாலும் அறியவில்லை என் றாலும் அவனே மற்ற அனைவரையும்விட சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான். சுயநலம் கொண்டவன் எல்லா கோயில் களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தையும் பார்த்திருந் தாலும், சிறுத்தையைப் போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர் கள் ஒவ்வொருவருக்கும் பின்னணியில் எங்கேயோ அளவற்ற ஒருமையுணர்வும் அளவற்ற நேர்மையும் இருந்தே தீரும். ஒருவனது சிறந்த வெற்றிக்கு இவையே காரணம். அவன் ஒருவேளை தன்னலத்தை முற்றிலும் துறந்தவனாக இல்லாமல்

போகலாம், ஆனால் அதை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறான். அவன் முற்றிலும் சுயநலமற்றவனாக இருந்திருந்தால், அவனது வெற்றி புத்தரது வெற்றியையும் ஏசுநாதரின் வெற்றியையும்போல் மிகச் சிறந்ததாக விளங்கியிருக்கும். எங்கேயும் சுயநலமின்மையின் அளவைப் பொறுத்தே வெற்றியின் அளவும் உள்ளது.

தொடர்ந்து விரிந்துகொண்டிருப்பது தான் வாழ்க்கை, குறுகுவது சாவு. சொந்தச் சுகங்களையே கவனித்துக்கொண்டு, சோம்பேறியாகக் காலம் கழிக்கின்ற சுயநல மனிதனுக்கு நரகத்தில்கூட இடம் கிடையாது.

அன்பே அளிக்கிறது

அன்பு, நேர்மை, பொறுமை—இவை மூன்றும் இருந்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை. வளர்ச்சி, அதாவது விரிந்து பெருகுதல், அதாவது அன்பு—இதைத் தவிர வாழ்க்கை என்பது வேறு என்ன? எனவே எல்லா அன்பும் வாழ்வு. அன்பே வாழ்வின் ஒரே நியதி. எல்லா

சுயநலமும் மரணமே—இந்த உலகமோ, அல்லது மறு உலகமோ இது உண்மை. நன்மை செய்வது வாழ்வு, பிறருக்கு நன்மை செய்யாமல் இருப்பது சாவு. நமது பார்வைக்குத் தென்படுகின்ற மனித மிருகங்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இறந்தவர்கள், வெறும் பிணங்கள். ஏனெனில் என் இளைஞர்களே, அன்புடையவனைத் தவிர பிறர் வாழ்பவர்கள் அல்ல. என் குழந்தைகளே, உணர்ச்சி கொள்ளுங்கள், உணர்ச்சி கொள்ளுங்கள். ஏழைகளுக்காக, பாமரர்களுக்காக, ஒதுக்கப்பட்டவர்களுக்காக உணர்ச்சி கொள்ளுங்கள். உணர்ச்சியில் ஆழ்ந்து செல்லுங்கள். இதயமே நின்று, மூளை குழம்பி, உங்களுக்குப் பைத்தியமே பிடித்துவிடுமெனத் தோன்றும் வரையிலும் உணர்ச்சியில் மூழ்குங்கள். பிறகு இறைவனின் திருவடிகளில் உங்கள் அந்தராத்மாவைச் சமர்ப்பியுங்கள். அப்போது ஆற்றல் வரும், உதவி வரும், குறையாத ஊக்கம் வரும். பாடுபடுங்கள், பாடுபடுங்கள்—கடந்த பத்து ஆண்டுகளாக

இதுவே எனது குறிக்கோளாக இருந்து வந்தது. பாடுபடுங்கள்—இதையே இன்னும் சொல்கிறேன். என்னைச் சுற்றிலும் இருளாக இருந்தபோதும் 'பாடுபடுங்கள்' என்றேன்; இப்போது ஒளி வருகின்ற வேளையிலும் 'பாடுபடுங்கள்' என்று அதையே சொல்கிறேன். என் குழந்தைகளே, பயம் வேண்டாம். நட்சத்திரங்கள் மின்னுகின்ற அந்தப் பரந்த வானம் இடிந்து வீழ்ந்து உங்களை நசுக்கிவிடுமோ என்று பயத்துடன் அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள். கொஞ்சம் பொறுங்கள், இன்னும் சில மணித் துளிகள்தான், அந்த வானம் உங்கள் காலடியில் கிடக்கும். பொறுங்கள்; பணத்தால் பயனில்லை, பெயரால் பயனில்லை, புகழால் பயனில்லை, கல்வியால் பயனில்லை, அன்பு ஒன்றே பயன்தருவது; துளைக்க முடியாத சுவர்களையெல்லாம் துளைத்து முன்னேறக் கூடியது ஒழுக்கம் ஒன்றுதான்.

மற்ற மனிதர்களுக்காகச் சிறிதும் இரக்கம் காட்டாத இவர்களை மனிதர் என்று நினைக்கலாமா?

கடமை அவ்வளவு இனிமையான ஒன்றல்ல; அன்பு என்னும் எண்ணெய் இடாமல் அதன் சக்கரங்கள் எளிதாகச் சுழலாது; மாறாக, தொடர்ந்து உராய்ந்த வண்ணமே இருக்கும். அன்பு இல்லா விடில் பெற்றோர் குழந்தைகளுக்கும், குழந்தைகள் பெற்றோருக்கும், கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் தங்கள் கடமையை எவ்வாறு செய்ய இயலும்? நமது வாழ்வில் தினமும் சிறு சிறு பூசல்களாகிய உராய்வுகளைச் சந்திக்க வில்லையா? அன்பின் வழியாக மட்டுமே கடமை இனிமையானதாக இருக்க முடி யும். இனி, சுதந்திர நிலையில் மட்டுமே அன்பு பிரகாசிக்க முடியும். புலன்களுக் கும் மனித வாழ்வில் தினமும் சந்தித்தே தீர வேண்டியதான கோபங்களுக்கும் பொறாமைகளுக்கும் இன்னும் எத்தனையோ அற்பத்தனங்களுக்கும் அடிமையாவதுதான் சுதந்திரமா? நாம் வாழ்வில் சந்திக்கின்ற இத்தகைய சிறு நெருடல்களுக்கு நடுவில் பொறுமை யுடன் அவற்றைச் சகித்துக் கொள்வதே

சுதந்திரத்தின் மிகவுயர்ந்த வெளிப்பாடாக இருக்க முடியும். எரிச்சல் மற்றும் பொறாமைக்கு எளிதில் வசப்படுகின்ற இயல்புடையவர் களாகிய பெண்கள் எளிதில் கணவனைக் குறைகூறி விடு கிறார்கள். அதுதான் தங்கள் சுதந்திரம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் தாங்கள் அடிமைகளாக இருப்பதையே அதன்மூலம் நிரூபிப்பதை அவர்கள் அறிய வில்லை. மனைவியிடம் குற்றம் காண் கின்ற கணவர்களின் விஷயமும் இதுதான்.

அன்பு பலனளிக்காமல் போவதில்லை. என் மகனே, இன்றோ நாளையோ யுகாந் தரத்திலோ உண்மை வெல்வது நிச்சயம். அன்பு நிச்சயம் வெல்லும். உனது மனித சகோதரர்களை நேசிக்கிறாயா? கடவுளை எங்கேபோய் தேடுகிறாய் நீ? ஏழைகள், துன்புறுபவர்கள், பலவீனர்கள் அனை வரும் தெய்வங்கள் அல்லவா? அவர்களை ஏன் முதலில் வழிபடக் கூடாது? ஏன் கங்கைக் கரையில் கிணறு தோண்டப் போகிறாய்? அன்பின் எல்லாம் வல்ல ஆற்றலில் நம்பிக்கை கொள். மின்னி

மறைகின்ற இந்தப் பெயர்புகழை யார் பொருட்படுத்துகின்றனர்! செய்தித்தாள்கள் என்ன கூறுகிறது என்று நான் ஒருபோதும் கவனித்ததில்லை. உன்னிடம் அன்பு இருக் கிறதா? இருந்தால் நீ எல்லாம் வல்லவன். நீ முற்றிலும் சுயநலம் அற்றவனா? அப்படி யானால் உன்னை எதனாலும் தடுக்க முடி யாது. ஒழுக்கத்தின் வலிமையே எங்கும் வெல்லக் கூடியது. கடலின் நடுவிலும் கூட, இறைவனே தன் குழந்தைகளைப் பாதுகாக்கிறார்.

சமுதாயத்தின் வாழ்வில்தான் தனி மனித வாழ்வு அடங்கியுள்ளது. சமுதாயத் தின் இன்பத்தில்தான் தனி மனித இன்பம் அடங்கியுள்ளது. சமுதாயம் இல்லாவிட் டால் தனிமனிதன் இருப்பது முடியாதது; இது அழியாத உண்மை, இந்த அடித் தளத்தில்தான் உலகமே இயங்குகிறது. எல்லை அற்றதான சமுதாயத்துடன் ஒன்றி, அதன் இன்பத்தில் இன்பம் காண்பதும், அதன் துன்பத்தில் துன்புறுவதுமாக மெள்ளமெள்ள முன்னேறுவதுதான் தனி மனிதனின் ஒரே கடமை. கடமை மட்டும்

அல்ல; இந்த நியதியை மீறினால் மரணம், பின்பற்றினால் மரணமிலாப் பெருவாழ்வு உண்டாகிறது.

உலகமாகிய இந்த நரகத்தில், ஒருவன் ஒருநாளாவது மற்றவனது இதயத்திற்குச் சிறிது இன்பமும் அமைதியும் அளிக்க முடியுமானால் அதுவே உண்மை. வாழ் நாள் முழுவதும் கஷ்டப்பட்ட பிறகு நான் இந்த உண்மையை அறிந்தேன்; ஏனைய அனைத்தும் வெறும் மண்ணாங்கட்டி. ...

பலவீனம் மரணத்திற்குச் சமானம்

இந்த உலகில் ஆகட்டும், வேறு எந்த உலகிலும் ஆகட்டும், அதில் பலவீனர்களுக்கு இடமில்லை. பலவீனம் அடிமைத்தனத்திற்கே இட்டுச் செல்கிறது. உடல் மற்றும் மன சம்பந்தமான எல்லா வகை துயரங்களும் பலவீனத்தாலேயே விளைகின்றன. பலவீனமே மரணம். நம்மைச் சுற்றி லட்சக்கணக்கான நுண்ணு யிர்கள் உள்ளன. ஆனால் உடல் அவற்றை உள்ளே அனுமதிக்க ஆயத்தமாக, பலவீன மாக இல்லாமல் அவை நமக்குத் துன்பம்

தர முடியாது. துன்பந்தரும் நுண்ணுயிர்கள் நம்மைச் சுற்றிக் கோடிக்கணக்காக மிதந்து கொண்டிருந்தாலும் என்ன? பொருட் படுத்த வேண்டாம். மனம் பலவீனம் அடைந்தாலன்றி, அவை நம்மை அணுகத் துணியாது; நம்மைப் பற்றிக்கொள்ளும் திறன் அவற்றிற்கு இருக்காது. இதுவே பேருண்மை. பலமே வாழ்வு, பலவீனமே மரணம். பலமே இன்பம். பலமே என்றென்றும் மரணமிலாப் பெருவாழ்வு. பலவீனமே ஓயாத சோர்வும் துயரமும். பலவீனமே மரணம்.

வேட்டையில் துரத்தப்படுகின்ற முயல்களைப்போல் நாமும் பயங்கர மானவற்றைக் கண்டு எப்படி ஓட்டம் பிடிக்கிறோம்! அந்த முயல்களைப் போலவே தலைகளை மறைந்துக் கொண்டு, நாம் பாதுகாப்பாக இருப்ப தாகவும் நினைக்கிறோம். பயங்கரமான அனைத்திலிருந்தும் உலகம் ஓடுவதைப் பாருங்கள். ஒருமுறை நான் காசியில் இருந்தபோது, ஒரு பக்கம் பெரிய குளமும் மறு பக்கம் உயர்ந்த சுவருமாக இருந்த ஒரு

பாதை வழியாகப் போக வேண்டியிருந்தது. அங்கே குரங்குகள் ஏராளம். காசியிலுள்ள குரங்குகள் பெரியவை, சில வேளைகளில் பொல்லாதவை. தங்கள் பாதை வழியாக என்னைப் போகவிடக் கூடாது என்று நினைத்துக் கொண்டன போலும்! கிரீச்சென்று கூச்சலிட்டபடியே என் காலின்மீது பாய்ந்தன. கூட்டமாக அவை என்னை நெருங்குவதைக் கண்ட நான் ஓடத் தொடங்கினேன். நான் ஓடஓட விடாமல் துரத்தி, தொடர்ந்து கடிக்க ஆரம்பித்தன. தப்ப முடியாதோ என்று தோன்றிற்று. அப்போது அங்கு வந்த ஒருவர் என்னைக் கூப்பிட்டு, 'மிருகங்களை எதிர்த்து நில்லுங்கள்' என்று கூறினார். நான் திரும்பித் துணிவுடன் அவற்றை எதிர்த்து நின்றேன். அவ்வளவு தான், அந்தக் குரங்குங்கள் திரும்பி ஓடின.

நம் வாழ்வுக்கே இது ஒரு படிப்பினை. பயங்கரத்தை எதிர்கொள்ளுங்கள், தைரியமாக எதிர்த்து நில்லுங்கள். நாம் பயந்து ஓடவில்லையென்றால், அந்தக் குரங்குக் கூட்டம் போலவே,

துன்பங்களும் ஓடிவிடும். சுதந்திரம் என்பது எப்போதாவது நமக்குக் கிடைக்கும் என்றால், அது இயற்கையை வெல்வதன்மூலமே தவிர, விலகி ஓடுவதால் அல்ல. கோழைகள் ஒருபோதும் வெற்றி கண்டதில்லை. பயம், துன்பம், அறியாமை இவை அகல வேண்டும் என்று நாம் விரும்பினால், அவற்றை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும்.

வலிமை, வலிமைதான் நமக்கு வாழ்க்கையில் மிகவும் தேவை. பாவம், துன்பம் என்றெல்லாம் சொல்கிறோமே, அவற்றின் ஒரே காரணம் பலவீனம்தான். பலவீனத்தால் அறியாமை ஏற்படுகிறது. அறியாமையால் துன்பம் விளைகிறது. அந்த வழிபாடு நமக்கு வலிமை தரும். அப்போது துன்பங்களைக் கண்டு சிரிப்போம், தீமையின் கொடுமைகளைக் கண்டு புன்முறுவல் பூப்போம், பயங்கரப் புலியின் இயல்பின் பின்னாலும் ஆன்மா இருப்பதைக் காண்போம். இதுதான் பலன்.

என் வாலிப நண்பர்களே, வலிமை பெறுங்கள். இதுவே நான் உங்களுக்குக்

கூறும் அறிவுரை. நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால்பந்தாடுவதன்மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்ல முடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் இவற்றை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. உங்கள் கைகால் தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை சேர்ந்தால் கீதையை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். உங்கள் ரத்தத்தில் வேகம் இருந்தால் ஸ்ரீகிருஷ்ணரின் மகத்தான ஆற்றலையும் மேதாவிலாசத்தையும் நீங்கள் இன்னும் சிறப்பாக அறிய முடியும். உங்கள் சொந்தக் கால்களில் நிமிர்ந்து நின்று, உங்களை மனிதன் என்று உணரும்போதுதான் நீங்கள் உபநிடதங்களையும் ஆன்மாவின் மகத்துவத்தையும் நன்றாக அறிந்துகொள்ள முடியும்.

உலகின் தீமைகளையும் பாவங்களையும்பற்றிப் பேசாதீர்கள். உங்கள் கண்களுக்கு இன்னும் தீமை தெரிகிறதே

என்பதற்காக அழுங்கள். இன்னும் எங்கும் பாவத்தையே பார்க்கின்ற நிலையில் இருக்கிறீர்களே என்பதை நினைத்து அழுங்கள்.

உலகத்திற்கு உதவி செய்ய விரும்பினால், உலகத்தின் மீது பழிபோடாதீர்கள். உலகை இன்னும் பலவீனப்படுத்தாதீர்கள். பாவம், துன்பம் என்று நீங்கள் இங்கே காணும் எல்லாமே பலவீனத்தின் விளைவுகளே அல்லாமல் வேறு என்ன? இத்தகைய உபதேசத்தால் உலகம் மேன்மேலும் பலவீனம்தான் அடைகிறது. தாங்கள் பாவிகள், பலவீனர்கள் என்றுதான் மனிதர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்பிக்கப்படுகிறார்கள். மிகவும் பலவீனமானவர்கள் முதல் எல்லோருமே மரணமிலாப் பெருநிலையின் பெருமைமிகு வாரிசுகள் என்றே அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே மனிதர்களின் மனத்தில் நல்ல ஆக்கபூர்வமான, உறுதியான, உதவுகின்ற எண்ணங்களே தோன்றட்டும். இப்படிப்பட்ட உறுதியான எண்ணங்களுக்கே உங்கள் மனத்தில் இடம் கொடுங்கள்.

உங்கள் சக்தியைப் பறித்து உங்களைப் பலவீனமாக்கும் எண்ணங்களுக்கு இடமே கொடுக்காதீர்கள். 'நானே பரம்பொருள், நானே பரம்பொருள்' என்று உங்கள் மனத்திற்கு எப்போதும் சொல்லுங்கள். இரவுபகலாக உங்கள் மனத்தில் அந்த எண்ணம் ஒரு பாடலாக ஒலித்துக் கொண்டே இருக்கட்டும். மரணத்தின் தறுவாயில்கூட, 'நானே பரம்பொருள்' என்று முழங்குங்கள். அதுதான் உண்மை; உலகின் எல்லையற்ற சக்தி உங்களுக்கே சொந்தமானது. உங்கள் மனத்தை மறைத்துக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை விரட்டி அடியுங்கள். நாம் துணிவுடன் இருப்போம். உண்மையை அறியுங்கள், உண்மையையே கடைப் பிடியுங்கள். குறிக்கோள், தூரத்தில் இருக்கலாம். ஆனால், விழித்திருங்கள், எழுந்திருங்கள், லட்சியத்தை அடையும்வரை, நிற்காதீர்கள்.

பலவீனர்கள், அனைத்தையும் இழந்து தங்களைப் பலவீனமாக உணரும்போது, பணம் சம்பாதிப்பதற்காக எல்லாவிதமான

மர்மங்களையும் கையாள்கிறார்கள்; ஜோதிடத்தையும் பிறவற்றையும் நாடுகிறார்கள்.

'கோழையும் முட்டாளுமே விதி என்பான்' என்கிறது சம்ஸ்கிருதப் பழமொழி ஒன்று. ஆற்றல் மிக்கவனோ, 'என் விதியை நானே வகுப்பேன்' என்று கூறுவான். முதுமையை நெருங்குபவர்களே விதியைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் பொதுவாக ஜோதிடத்தை நாடுவதில்லை. ஒருவேளை நாம் கிரகங்களின் ஆற்றலுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கலாம், அதற்காக அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது, 'நட்சத்திரங்களைக் கணக்கிட்டும், இவை போன்று வேறு தந்திரங்களைக் கையாண்டும் வயிறு வளர்ப்பவர்களைத் தவிர்க்க வேண்டும்' என்கிறார் புத்தர். இதுவரை பிறந்த இந்துக்களுள் உயர்ந்தவர் புத்தர், உண்மையை உணர்ந்தே அவர் அவ்வாறு கூறியுள்ளார். நட்சத்திரங்கள் வரட்டும், அதனால் என்ன தீமை ஏற்படும்? ஒரு நட்சத்திரம் என்

வாழ்க்கையைக் குலைத்துவிடும் என்றால் அந்த வாழ்க்கை சல்லிக்காசுக்கும் உதவாதது. ஜோதிடமும் பிற மர்மமானவையும் பொதுவாக பலவீன மனத்தின் அறிகுறி. இத்தகைய எண்ணங்கள் உங்கள் மனத்தில் தலைதூக்கும்போது உடனே டாக்டரைப் பார்க்க வேண்டும்; நல்ல உணவும் நல்ல ஓய்வும் கொள்ள வேண்டும்.

எனது போதனைகளுள் நான் முதலாவதாக வற்புறுத்துவது இதுவே: ஆன்ம பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ, உடல் பலவீனத்தையோ தருகின்ற எதையும் உங்கள் கால் விரல்களாலும் தீண்டாதீர்கள்.

மனிதனில் உள்ள இயற்கை ஆற்றலின் வெளிப்பாடே மதம். அளவிலா ஆற்றல் விசை ஒன்று இந்தச் சிறு உடலுள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுருள் விரிந்துகொண்டே இருக்கிறது. அது விரியவிரிய ஒன்றன்பின் ஒன்றாகப் பல உடல்களும் போதவில்லை, எனவே அந்த விசை இந்த உடல்களை எறிந்துவிட்டு,

உயர்ந்த உடல்களை எடுக்கிறது. இதுவே மனிதனின் வரலாறு, மதத்தின் வரலாறு, நாகரீகத்தின் வரலாறு, அல்லது முன்னேற்றத்தின் வரலாறு. கட்டுண்டு கிடக்கும் அரக்கனான புரோமீதியஸ்[1] கட்டுக்களை அறுத்துக்கொண்டு வருகிறான். அது எப்போதும் ஆற்றலின் வெளிப்பாடு. ஜோதிடம் போன்ற விஷயங்களில் ஏதோ கடுகளவு உண்மை இருந்தாலும் அவற்றைப் புறக்கணித்தேயாக வேண்டும்.

தைரியமாக இருப்பது எப்படி?

தென் கடல் தீவுகளில் பெரும் புயலில் அடியுண்ட சில கப்பல்களைப்

1. கிரேக்கப் புராணத்தில் வருகின்ற ஒரு பாத்திரம். அவன் களிமண்ணால் மனிதனைச் செய்து, உயிர் கொடுப்பதற்காகச் சொர்க்கத்திலிருந்து தீயைத் திருடிக் கொண்டுவந்தான். ஜீயஸ் என்னும் கடவுளர் தலைவன் அவனை ஒரு பாறாங்கல்லில் கட்டிவைத்து, அவனைக் கொத்தித் தின்னுமாறு ஒரு கழுகை ஏவினான். ஆனால் கழுகு கொத்திய பகுதி இரவில் மீண்டும் வளர்ந்துவிடும். ஹெர்குலிஸ் என்பவன் வந்து கழுகைக் கொன்று விடுவிக்கும்வரை புரோமீதியஸ் துன்பப்பட்டான்.

பற்றிய ஒரு கதையை நான் படிக்க நேர்ந்தது. அதைப் பற்றிய படமும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் (Illustrated London News) வந்தது. ஒரே ஓர் ஆங்கிலேயக் கப்பலைத் தவிர மற்றவை அனைத்தும் உடைந்து போயின. ஆங்கிலேயக் கப்பல் மட்டுமே தாக்குப்பிடிக்க முடிந்தது. தாங்கள் மூழ்கிப் போவதைப்பற்றிச் சிறிதும் எண்ணாமல், கப்பல்தளத்தில் நின்று, புயலை எதிர்த்துச் செல்லும் கப்பல்களை உற்சாகப்படுத்துபவர்கள் அந்தப் படத்தில் காணப்பட்டனர்.[1] அவர்களைப் போல் தைரியத்துடனும் கருணையுடனும் இருங்கள்.

இருள் உன்னைச் சூழ்கின்றபோதெல்லாம் உன் உண்மை இயல்பை வலியுறுத்து, பாதகமானவை எல்லாம் மறைந்தே தீர வேண்டும். ஏனெனில் இவை எல்லாம் வெறும் கனவுகள். துன்பங்கள் மலையளவாகத் தோன்றலாம்,

---

1. சாமோவா தீவுகளுக்கருகில் நின்ற பிரிட்டிஷ் கப்பலான H.M.S காலியோபியும் அமெரிக்கப் போர்க் கப்பல்களும்.

எல்லாமே பயங்கரமானவையாக, இருள் சூழ்ந்தவையாகத் தோன்றலாம், ஆனால் எல்லாம் வெறும் மாயை. பயப்படாதே, மாயை மறைந்துவிடும். நசுக்கு, அது ஓடிவிடும். காலால் மிதி, இறந்துவிடும். பயத்திற்கு இடம் கொடுக்காதே. எத்தனை முறை தோல்வி அடைந்தாய் என்பதை எண்ணிக் கொண்டிருக்காதே. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். காலத்திற்கு எல்லையில்லை. முன்னேறு. திரும்பத்திரும்ப உன் உண்மை இயல்பை வலியுறுத்து, ஒளி வந்தே தீரும்.

இதுவரை பிறந்த அனைவரையும் வேண்டிக்கொள், உன் உதவிக்கு யார் வருவார்கள்? யாரும் தப்ப முடியாத மரணத்தை வெல்வது எப்படி? உனக்கு நீயே உதவிக்கொள். நண்பா, உனக்கு வேறு யாரும் உதவ முடியாது. ஏனெனில் உனக்கு மிகச் சிறந்த நண்பன் நீ, உனக்கு மிகக் கொடிய பகைவனும் நீயே. எனவே உன் ஆன்மாவைப் பற்றிக்கொள். எழுந்து நில். பயப்படாதே.

தைரியமாக முன் செல்லுங்கள். ஒரு நாளிலோ, ஒரு வருடத்திலோ வெற்றியை எதிர்பார்க்காதீர்கள். மிக உயர்ந்த லட்சியத்தையே எப்போதும் பற்றியிருங்கள். உறுதியாக இருங்கள். பொறாமை, சுயநலம் இவற்றைத் தவிர்த்து விடுங்கள். கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுங்கள். சத்தியத்திற்கும், மனித குலத்திற்கும், உங்கள் நாட்டிற்கும் எப்போதும் உண்மையாக நடந்துகொள்ளுங்கள்; உலகத்தையே அசைத்து விடுவீர்கள். மனிதன், அவனது ஆளுமை, அவனது வாழ்க்கை— இதுதான் ஆற்றலின் ரகசியம்; வேறு எதுவும் அல்ல. இதை நினைவில் வையுங்கள். இந்தக் கடிதத்தை வைத்திருங்கள், உங்களுக்குக் கவலையோ பொறாமையோ ஏற்படும்போது இறுதி வரிகளைப் படியுங்கள். பொறாமை என்பது அடிமைகளின் சாபக் கேடு. நமது நாட்டின் சாபக்கேடு. அதை எப்போதும் தவிர்த்துவிடுங்கள். எல்லா ஆசிகளும் வெற்றிகளும் உங்களை அடையட்டும்.

வீரம் எனும் சக்தி

முதலில் மனிதனாகு. அப்போது பிற எல்லாம் தாமாகவே உன்னைத் தேடி வருவதைக் காண்பாய். தெரு நாயைப் போல் உறுமிக்கொண்டு சண்டையிடுவதை விட்டுவிடு. நல்ல நோக்கம், நேரிய வழி, தர்ம வீரம், நல்ல வலிமை ஆகியவற்றைப் பெறு. மனிதனாகப் பிறந்த நீ ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல். 'துளசி! நீ இந்த உலகத்தில் பிறந்தபோது உலகம் சிரித்தது, நீ அழுதாய். நீ உலகைவிட்டுச் செல்லும் போது நீ சிரிக்க உலகம் உனக்காக அழத்தக்க நல்ல காரியங்களைச் செய்.'[1] இதைச் சாதிக்க முடிந்தால் நீ மனிதன். இல்லையேல் நீ பிறந்தும் பயனில்லை.

இந்த உலகம் எதைச் சொல்கிறதோ சொல்லட்டும், நான் என் கடமையைச் செய்கிறேன்—இதுதான் ஒரு வீரனின் செயல்முறையாக இருக்க வேண்டும்.

1. கவிஞரும் பக்தரும் 'ராமசரிதமானஸ்' என்ற நூலின் ஆசிரியருமான துளசிதாசர் இங்கு தன்னை குறிப்பிடுகிறார்.

அப்படியில்லாமல், இவன் என்ன சொல்கிறான், அவன் என்ன எழுதுகிறான் என்பதிலேயே இரவும்பகலும் மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால் இந்த உலகத்தில் பெரும் காரியங்கள் எதையும் சாதிக்க முடியாது. ''சான்றோர்கள் உன்னைப் பாராட்டட்டும் அல்லது பழிக்கட்டும். செல்வத்தின் தேவதையான லட்சுமி வரட்டும் அல்லது அவளுக்கு எங்கு விருப்பமோ அங்கே போகட்டும். மரணம் இன்றோ அல்லது நூறு ஆண்டுகள் கழித்தோ வரட்டும். என்ன நேர்ந்தாலும் மேலோர்கள் நேரான பாதையிலிருந்து ஒரு போதும் தவற மாட்டார்கள்'[1] என்னும் சம்ஸ்கிருத சுலோகம் உனக்கு நினைவிருக்கிறது அல்லவா! மக்கள் உன்னைப் பாராட்டட்டும் அல்லது பழிக்கட்டும். திருமகளின் அருள் உன்மீது வரட்டும்

1. நிந்தந்து நீதிநிபுணா: யதி வா ஸ்துவந்து
லக்ஷ்மீ: ஸமாவிசது கச்சது வா யதேஷ்டம் |
அத்யைவ மரணமஸ்து சதாப்தாந்தரே வா
ந்யாயாத் பத: ப்ரவிசலந்தி பதம் ந தீரா: ||
—பர்த்ருஹரி, நீதி சதகம்,

அல்லது வராமல் போகட்டும், உன் உடம்பு இன்றைக்கு அழியட்டும் அல்லது இன்னும் ஒரு யுகம் கழித்து அழியட்டும். நியாய வழியிலிருந்து ஒருபோதும் விலகாதே. ஒருவன் அமைதி என்னும் சொர்க்கத்தை அடைவதற்கு முன்பு எவ்வளவோ புயல்களையும் அலைகளை யும் கடந்தாக வேண்டியிருக்கிறது! ஒருவன் எவ்வளவு மகத்தானவனாக ஆகிறானோ, அந்த அளவிற்கு அவன் கடுமையான சோதனைகளைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. நடைமுறையில் நன்றாகப் பரிசோதித்த பின்னரே உலகம் அவர்களின் மகோன்னதத்தை ஏற்றுக் கொள்கிறது. யார் பயந்த மனமும் கோழைத்தனமும் உடையவனாக இருக் கிறானோ, அவன் சீறியெழும் அலை களுக்கு அஞ்சி தன் சிறு கப்பலைக் கரைக்கு அருகிலேயே மூழ்கடித்துவிடு கிறான். வீரர்கள் இதற்கெல்லாம் அசைந்து கொடுப்பார்களா, என்ன! வருவது வரட்டும், நான் என் லட்சியத்தை அடைந்தே தீர்வேன்—இதுதான் வீரம்.

இத்தகைய வீரம் உன்னிடம் இல்லா விட்டால் நூறு தெய்வங்கள் வந்தாலும் உன் ஜடத் தன்மையை நீக்க முடியாது.'

மனவலிமை இழந்தவர்களால் எந்த வேலையையும் செய்ய முடியாது. பிறவிகள்தோறும் அவர்கள் அழுது அரற்றிக்கொண்டே வந்துவந்து போகிறார் கள். ''**வீரபோக்யா** வஸுந்தரா—இந்த உலகம் வீரர்களால்தான் அனுபவிக்கப் படுகிறது'' என்பது அழியாத உண்மை. வீரனாக இரு. ''**அபீ: அபீ:**—பயமில்லை, பயமில்லை'' என்று எப்போதும் முழங்கு; ''பயம் கொள்ளாதே'' என்பதை எல்லோ ரிடமும் சொல். பயமே மரணம், பயமே பாவம், பயமே நரகம், பயமே அதர்மம், பயமே தவறான வாழ்க்கை. உலகத்திலுள்ள எதிர்மறையான சிந்தனைகள் எல்லாமே பயம் என்னும் இந்தச் சாத்தானிலிருந்தே தோன்றின. இந்தப் பயம்தான், சூரியன், காற்று, மரணம், அனைத்தையும் தத்தம் இடத்திலேயே கட்டுப்படுத்திச் செயல் படும்படி வைத்திருக்கிறது. எதையும் அது தன் பிடியிலிருந்து தப்பிச்

செல்லவிடுவதில்லை. 'இந்த உடம்பை எடுத்து, வாழ்க்கையின் இன்பம் துன்பம், செல்வம் வறுமை என்னும் அலைகளால் எத்தனை முறைதான் நீ பந்தாடப்படுவாய்! ஆனால் இதெல்லாம் கணநேரமே இருப்பது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள். அவற்றைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாதே.

தன்னம்பிக்கை ஏன்?

தன்னம்பிக்கை லட்சியம் நமக்கு மிகப்பெரிய உதவியாகும். இந்தத் தன்னம்பிக்கை எங்கும் உபதேசிக்கப் பட்டு, செயல்முறையில் பின்பற்றப்படு மானால் நம்மிடையே உள்ள தீமைகளும் துயரங்களும் பெரும்பாலும் அழிந்து விடும். மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும்போது, எந்த ஆணோ பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால், அதற்கு, மற்ற எல்லாவற்றையும்விட முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான். பிறந்ததி லிருந்தே, நான் சிறப்படையப் போகிறேன்

என்ற எண்ணத்துடன் அவர்கள் வாழ்ந் தார்கள், சிறந்தவர்கள் ஆனார்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு ஒருவன் சென்றாலும், திடீரென ஒரு முரட்டுத் துணிச்சலுடன் மேலெழுந்து, தன்னம்பிக்கையுடன் திகழும் நேரம் ஒன்று வந்தே தீரும். ஆரம்பத்திலேயே நாம் இதைத் தெரிந்துகொள்வது நல்லது.

எந்த மனிதன் தன்னைத்தானே வெறுக்கத் தொடங்கிவிட்டானோ, அவனுக்கு அழி வின் வாசல் எப்போதோ திறந்துவிட்டது. இது ஒரு நாட்டிற்கும் பொருந்தும். நமது முதற்கடமை நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுதான். ஏனெனில் நாம் முன்னேற வேண்டுமானால் முதலில் நமக்கு நம் மிடம் நம்பிக்கை வேண்டும்; பிறகு கடவு ளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன், கடவுளிடமும் ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது.

எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள்; வலிமையானவர்களாக நினைத்தால்

வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள்; தூய்மை யற்றவர்களாக எண்ணினால் தூய்மை யற்றவர் ஆவீர்கள், தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

எனவே நம்மைப் பலவீனர் என்று நினைக்க வேண்டாம்; நாம் வலிமை மிக்கவர்கள், எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், எல்லாம் அறிந்தவர்கள் என்று நினைக்கும்படி இது போதிக்கிறது. நான் அதை இதுவரை வெளிப்படுத்த வில்லை என்றால், அதைப்பற்றிக் கவலை இல்லை; ஆனால் அது என்னில் இருக்கிறது. எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் எல்லா தூய்மையும் எல்லா சுதந்திரமும் என்னில் இருக்கிறது. அந்த அறிவை ஏன் என்னால் வெளிப்படுத்த முடியவில்லை? ஏனென்றால் அவைமீது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் அதை நம்பினால் அவை வெளிப்பட்டே தீர வேண்டும்; வெளிப்படவே செய்யும்.

உலக வரலாறு என்பது தன்னம் பிக்கை உடைய சிலரின் வரலாறே.

அத்தகைய தன்னம்பிக்கை நம்முள் இருக்கும் தெய்வத்தன்மையை வெளிப் படுத்துகிறது. நீங்கள் எதை வேண்டு மானாலும் செய்யலாம். எல்லையற்ற ஆற்றல் வெளிப்படும் அளவுக்கு நீங்கள் முயலாதபோதுதான் தோல்வி அடை கிறீர்கள். தன்னம்பிக்கையை இழக்கின்ற அந்தக் கணமே ஒருவன் அழிகிறான்; ஒரு நாடும் அவ்வாறே.

தனித் தன்மையுடன் வளர்தல்

இன்னொன்றையும் அறிந்துகொள்ள வேண்டும், சகோதரா, பிறநாடுகளிடமிருந்து நாம் கற்க வேண்டியவை ஏராளம் உள்ளன. இனி நான் கற்க வேண்டியது எதுவுமில்லை என்பவன் சாவின் அருகில் போய்விட்டான். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எந்த நாடு கூறுகிறதோ அது அழிவின் எல்லையில் நிற்கிறது. 'வாழும் நாள்வரை நான் கற்கிறேன்.' இது சரி. எங்கிருந்து எதைக் கற்றாலும் அதை நமது அச்சில் அமைத்துக்கொள்ள வேண்டும், அதுதான் விஷயம்.

யாரும் மற்றவருக்குக் கற்பிக்க இயலாது. நீங்களே உண்மையை உணர வேண்டும்; உங்கள் இயல்புக்கு ஏற்ப நீங்களே அதனைச் செயல்படுத்தவும் வேண்டும்.... எல்லோரும் தனித்தன்மை உள்ளவர்களாக விளங்க முயல வேண்டும். பலம் வாய்ந்தவர்களாக, சொந்தக்காலில் நிற்பவர்களாக, சுயமாகச் சிந்திக்கக் கூடிய வர்களாக, தங்கள் ஆன்மாவை அறிபவர் களாகத் திகழ வேண்டும். மற்றவர்களின் கொள்கையை அப்படியே விழுங்குவதில் எந்தப் பயனும் இல்லை. சிறைக்காவலர் களைப் போல், ஒன்றாக எழுவதும் ஒன்றாக உட்காருவதும் ஒரே உணவை உண்பதும், ஒன்றாகத் தலையாட்டுவதும் எந்தப் பலனையும் தராது. மாறுதல்களே வாழ்க்கையின் அறிகுறி. மாறுதல்கள் இல்லா திருப்பது மரணத்தின் அடையாளம்.

நாம் நினைவில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான பாடம் இது. காப்பியடிப்பது ஒருபோதும் நாகரீகம் ஆகாது....போர்த்தாலும் கழுதை எந்தக் காலத்திலும் சிங்கம் ஆக முடியாது.

காப்பியடித்தல், கோழைத்தனமான இந்தப் போலித்தனம் ஒருபோதும் முன்னேற்றத்தைத் தராது. இது மனிதனின் கேவலமான வீழ்ச்சியின் தெளிவான அடையாளம். நாம் பிறரிடமிருந்து கற்க வேண்டியவை உண்மையிலேயே ஏராளம் உள்ளன. பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள மறுப்பவன் செத்தவனே... நல்லவற்றை மற்றவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அவைகளை உங்கள் இயல்பிற்கு ஏற்பக் கிரகித்துக்கொள்ளுங்கள், மற்றவர்களாக மாறாதீர்கள். இந்திய வாழ்க்கையிலிருந்து வெளியே இழுக்கப்பட்டவர்களாகி விடாதீர்கள். இந்தியர்கள் மற்ற இனத்தவரைப்போல் உடையுடுத்தி, உண்டு வாழ்ந்தால் இந்தியாவிற்கு நன்மை விளையும் என்று ஒருகணம்கூட நினைக்காதீர்கள்.

விதை தரையில் ஊன்றப்பட்டு, மண்ணும் காற்றும் நீரும் அதைச் சுற்றி போடப்படுகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிறதா? இல்லை. அது செடியாகிறது. தனது வளர்ச்சி நியதிக்கு ஏற்ப அது வளர்கிறது. காற்றையும்

மண்ணையும் நீரையும் தனதாக்கிக் கொண்டு, தனக்கு வேண்டிய சத்துப் பொரு ளாக மாற்றி, ஒரு செடியாக வளர்கிறது.

அதேபோலவே ஒவ்வொருவரும் மற்ற மதங்களின் நல்ல அம்சங்களைத் தனதாக்கிக்கொண்டு, தன் தனித்தன்மை யைப் பாதுகாத்துக்கொண்டு, தன் வளர்ச்சி நியதியின்படி வளர வேண்டும்.

எது ஒழுக்கம்?

பல்வேறு வகையான நீதிநெறிக் கோட்பாடுகளுள் பல்வேறு விதங்களில் வெளிப்பட்டு நிற்கின்ற ஒரு கருத்து உள்ளது. அது மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதான். மனிதர் களிடம் அன்பாயிருப்பது, எல்லா பிராணி களிடமும் அன்பாயிருப்பது—இதுதான் மனிதகுலத்தை முக்கியமாக வழிநடத்தும் குறிக்கோளாக இருக்க வேண்டும். இதெல்லாமே, 'நான்தான் பிரபஞ்சம்; இந்தப் பிரபஞ்சம் இரண்டற்றது; ஒன்றே தான்' என்ற நிலையான உண்மையின் பல்வேறு வெளிப்பாடுகள். அப்படி

இல்லாவிட்டால் இந்தச் செயல்களுக்கெல்லாம் காரணம் என்ன? நான் எதற்காக என்னைச் சுற்றியிருப்பவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும்? ஏன் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்? என்னைக் கட்டாயப்படுத்துவது எது? அதுதான் இரக்கம்; எங்கும் ஒரே பொருள் உள்ளது என்ற உணர்ச்சி.

கல்லான இதயங்கள்கூடச் சில வேளைகளில் மற்றவர்களுக்காகக் கனிவதுண்டு. நீ பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தனித்துவம் வெறும் மனமயக்கம், அதை இப்படிக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருப்பது பாராட்டத் தக்கதல்ல என்று சொன்னால் மனிதன் பயப்படுகிறான். ஆனால் அவனே, முழுத் தன்னல மறுப்புதான் எல்லா நன்னெறிக்கும் அடிப்படை என்றும் கூறுகிறான்.

இந்த முழுத் தன்னல மறுப்பு என்பது என்ன? ஆன்மாபோல் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கின்ற தோன்றும் மனிதனை விடுவதே அது. எல்லா சுயநலத்தையும் விடுவதே அது. 'நான்', 'எனது' என்ற

அகங்கார மமகாரங்கள் பழைய மூட நம்பிக்கையிலிருந்து பிறந்தவை. இந்தப் போலி ஆன்மா மறையும் அளவிற்கு உண்மை ஆன்மா வெளிப்பட்டுத் தோன்று கிறது. இதுவே உண்மையான தன்னல மறுப்பு. இதுவே எல்லா அறநெறி உப தேசங்களின் மையமும் அடிப்படையும் சாரமும் ஆகும். தெரிந்தோ தெரியாமலோ உலகம் முழுவதும் இந்தக் குறிக்கோளை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது; நடைமுறையிலும் ஓரளவு இதை அனுசரிக் கிறது. பெரும்பாலானோர் தாங்கள் உணராம லேயே இதைச் செய்து கொண்டிருக் கிறார்கள். அவர்கள் உணர்வுபூர்வமாகச் செய்யட்டும். 'நான்', 'எனது' என்பவை உண்மையான ஆன்மாவல்ல, ஆன்மாவின் தடைகளே என்று அவர்கள் உணர்ந்து அவற்றை விடட்டும். இந்தத் தோன்றும் மனிதன் அகத்தேயுள்ள எல்லையற்ற உண் மையின் ஒரு மின்னல் தோற்றம் மட்டுமே; எல்லாமாக இருக்கும் எல்லையற்ற நெருப்பின் ஒரு பொறியே. அவனது உண்மையான இயல்பு எல்லையற்றது.

பிறருக்கு நன்மை செய்வது புண்ணியம், தீமை செய்வது பாவம். வலிமையும் ஆண்மையும் புண்ணியம், பலவீனமும் கோழைத்தனமும் பாவம். சுதந்திரம் புண்ணியம், சார்ந்திருப்பது பாவம். பிறரை நேசிப்பது புண்ணியம், வெறுப்பது பாவம். கடவுளையும் தன் ஆன்மாவையும் நம்புவது புண்ணியம், சந்தேகிப்பது பாவம். ஒருமையை அறிவது புண்ணியம், வேறுபாடு காண்பது பாவம். புண்ணியம் பெறும் வழியையே சாஸ்திரங்கள் காட்டுகின்றன.

எல்லா மொழிகளிலும், எல்லா மதங்களிலும், எல்லா தீர்க்கதரிசிகளாலும் போதிக்கப்பட்ட எல்லா நீதிநெறிகளின் சாரம் இதுதான். 'சுயநலமற்று இருங்கள்', 'நான் அல்ல நீ'—இதுதான் எல்லா ஒழுக்க நெறிகளுக்கும் பின்னணி. இதன் பொருள் என்ன? தனித்துவம் என்பதே இல்லை, நீ என்னில் ஒரு பகுதி, நான் உன்னில் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்வது; நான் உன்னைத் துன்புறுத்தினால், என்னையே

துன்புறுத்துகிறேன், உனக்கு உதவினால் எனக்கே உதவுகிறேன் என்பதை ஏற்றுக் கொள்வது; நீ உயிர் வாழ்கின்றபொழுது எனக்கு இறப்பு இருக்க இயலாது என்பதை ஏற்றுக்கொள்வது. இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு புழு உயிருடன் இருக்கும்வரையில் நான் எப்படிச் சாக முடியும்? ஏனெனில் என் உயிர் அந்தப் புழுவின் உயிரிலும் உள்ளது. அதேவேளை யில் இது ஒரு பாடமும் கற்பிக்கிறது, உதவி செய்யாமல் நம் சகோதரர்களுள் ஒருவரையும் நாம் புறக்கணிக்க இயலாது, ஏனெனில் அவர்களின் நலத்தில்தான் நம் நலம் இருக்கிறது.

மனிதனுக்கு ஒழுக்கமும் தூய்மையும் ஏன் தேவை? ஏனெனில் அது அவனது சங்கல்பத்தைத் திடம்பெறச் செய்கிறது. உண்மையான இயல்பை உணர்த்துவதன் மூலம் சங்கல்பத்திற்கு வலிமை தரும் ஒவ்வொன்றும் ஒழுக்கம். இதற்கு மாறானதை விளைவிக்கும் ஒவ்வொன்றும் ஒழுக்கமின்மை.

குறிக்கோளில் உறுதியாக இருத்தல்

இதுதான் முதற்படி, மாபெரும் படி; அதாவது லட்சியத்தில் தீவிர நாட்டம். இது ஏற்பட்டுவிட்டால் மற்றவை எளிதில் வந்துவிடும். இந்த உண்மையை இந்திய மனமே கண்டுபிடித்தது. உண்மையை அறிவதற்காக எவ்வளவு தூரம் செல்லவும் இந்தியர்கள் தயங்குவதில்லை. ஆனால் இங்கு மேலை நாடுகளில், எல்லாம் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. உங்கள் பெரிய லட்சியம் உண்மையை அறிவதல்ல, முன்னேற்றம் காண்பதே. போராட்டம்தான் ஒருவன் பெறும் பெரிய படிப்பினை. இந்த வாழ்க்கையில் நாம் பெறும் பெரிய நன்மை இந்தப் போராட்டப் பயிற்சியே. போராட்டத்தின் வழியாகவே நாம் செல்ல வேண்டும். சொர்க்கத்திற்கு ஒரு பாதை இருக்குமானால் அது நரகத்தின் வழியாகவே இருக்கும். நரகத்தின் வழியாகச் சொர்க்கத்திற்குச் செல்வதுதான் என்றும் உள்ள வழி. ஒருமுறையல்ல, இருமுறை அல்ல, பல்லாயிரம் முறை சூழ்நிலையுடன் போராடி, இறந்து,

அப்போதும் தைரியத்தை இழக்காமல் ஆன்மா போராடுமானால் அது பேராற்றல் உள்ளதாக மாறிவிடுகிறது. அப்போது அது தனது லட்சியத்தைவிடத் தான் எவ்வளவோ மடங்கு உயர்ந்துவிட்டதைக் காண்கிறது. எனவே அந்த லட்சியத்தைக் கண்டு சிரிக்கிறது. ஆன்மாவாகிய நானே லட்சியம், வேறு எதுவும் இல்லை. என் ஆன்மாவுடன் ஒப்பிட வேறு என்ன இருக்கிறது? ஒரு பை பொன்னும் மணி யும் எனது ஆன்மாவின் லட்சியமாக முடியுமா? முடியவே முடியாது. நான் கொள்ளக்கூடிய லட்சியங்களுள் மிக உயர்ந்தது எனது ஆன்மாதான். எனது உண்மை இயல்பை உணர்வதுதான் என் வாழ்க்கையின் ஒரே லட்சியம்.

முற்றிலும் தீமையான எதுவும் இல்லை. கடவுளோடு சாத்தானுக்கும் இங்கே இடம் இருக்கிறது, சாத்தான் இல்லை என்றால் கடவுளும் இங்கே இருக்க மாட்டார். நான் முன்பு கூறியது போல் நரகத்தின் வழியாகவே சொர்க்கத் திற்குச் செல்ல வேண்டும். நமது

தவறுகளுக்கும் இங்கே இடம் உண்டு. முன்னேறிக்கொண்டே இருங்கள். செய்யக் கூடாத ஒன்றை நீங்கள் செய்து விட்டதாக நினைத்தாலும் திரும்பிப் பார்க்க வேண்டாம். இன்றைய உங்களை உருவாக்குவதில் அந்தத் தவறுகளுக்கு இட மில்லை என்றா நினைக்கிறீர்கள்? எனவே உங்கள் தவறுகளை வாழ்த்துங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள். துன்பம் பெரும் பேறு! இன்பமும் பெரும் பேறு! உங்கள் நிலைமை என்னவானாலும் பொருட் படுத்தாதீர்கள். லட்சியத்தை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். முன்னேறிச் செல் லுங்கள். சிறுசிறு தவறுகளையும் குறை களையும் திரும்பிப் பார்த்துக் குமைந்து கொண்டிருக்காதீர்கள். நமது போர்க்கள மாகிய பிரபஞ்சத்தில் தவறுகள் என்ற புழுதி கிளம்பியே தீரும். இந்தப் புழுதியைச் சகித்துக் கொள்வதற்கான உறுதியற்றவர்கள் போரிலிருந்து விலகிக் கொள்ளட்டும்.

லட்சியம் உள்ளவன் ஆயிரம் தவறு களைச் செய்வானானால், லட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்பது நிச்சயம். எனவே ஒரு லட்சியம் இருப்பது சிறந்தது. இந்த லட்சியம் நமது இதயத்தில் புகும்வரை, நமது மூளையில் புகும்வரை, நமது நாடி நரம்புகளில் புகும்வரை, நமது ரத்தத்தின் ஒவ்வொரு துளியுடனும் கலந்து துடிக்கும் வரை, நமது உடலின் அணுக்கள் தோறும் கலந்து ஊடுருவும்வரை நாம் அதைப் பற்றிக் கேட்க வேண்டும். அதையே சிந்திக்க வேண்டும். 'உள்ளம் நிறையும் போது வாய் பேசுகிறது'. அது மட்டுமல்ல; உள்ளத்தின் நிறைவுதான் கைகளை வேலை செய்யத் தூண்டுகிறது.

எண்ணமே நம்மிலுள்ள தூண்டும் சக்தி. மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள். நாட்கணக்காக அதைக் கேளுங்கள். மாதக்கணக்காகச் சிந்தியுங்கள். தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள். தோல்விகள் இயற்கையானவை. வாழ்க் கைக்கு அழகு சேர்ப்பவை அவை.

தோல்விகள் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? போராட்டம் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல. அப்படிப் பட்ட வாழ்க்கையில் என்ன இனிமை இருக்கிறது! போராட்டங்களையும் தவறு களையும் பொருட்படுத்தாதீர்கள். ஒரு பசு பொய் சொல்வதை நான் கேட்டதில்லை, ஆனால் அது வெறும் பசுதான்; மனிதன் அல்ல! ஆகவே தோல்விகளை, சறுக்கல் களைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆயிரம் தடவை லட்சியத்திலிருந்து வழுவ நேர்ந்தாலும் திரும்பத்திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஆயிரம் தடவை தவறினாலும் இன்னொரு முறை முயலுங்கள்.

எல்லாவற்றிலும் கடவுளைக் காண்பதுதான் மனிதனின் லட்சியம். எல்லாவற்றிலும் பார்க்க முடியா விட்டால், நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும். பிறகு இன்னொன்றில் பார்க்க வேண்டும். இப் படியே இந்தக் கருத்தை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மாவின்

முன்னால் எல்லையற்ற வாழ்க்கை உள்ளது. எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் லட்சியத்தை அடைவது உறுதி.

ஒரு லட்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். அதையே நினையுங்கள், அதையே கனவு காணுங்கள், அந்த லட்சியத்திற்காகவே வாழுங்கள். மூளை, தசைகள், நரம்புகள் என்று உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த லட்சியத்தால் நிறையட்டும். பிற கருத்துக்கள் அனைத்தையும் அடியோடு விட்டு விடுங்கள். வெற்றிக்கு வழி இதுவே. ஆன்மீகச் செம்மல்கள் உருவாக்கப்பட்ட வழி இதுவே. மற்றுள்ளவர்கள் வெறும் பேச்சுஎந்திரங்கள் மட்டுமே.

அனுபவ வாழ்க்கை, லட்சியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாம் தத்துவம் பேசினாலும், தினசரி வாழ்க்கையின் கடினமான கடமைகளைச் செய்து கொண்டிருந்தாலும் நமது வாழ்க்கை முழுவதையும் ஊடுருவி நிற்பது லட்சியமே.

லட்சியத்தின் ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டு, ஒவ்வொரு சிறு துளைமூலமும் காற்றுத் துவாரம் மூலமும் நேராகவோ, வளைந்தோ, அலைபோலவோ பாய்ந்து கொண்டிருக்கின்றன. தெரிந்தோ தெரியாமலோ, நாம் ஒவ்வொரு செயலையும் அந்த ஒளியில் தான் செய்தாக வேண்டும். ஒவ்வொரு பொருளும் அதனால்தான் அழகாகவோ விகாரமாகவோ மாறுகிறது. நாம் எவ்வாறு இருக்கிறோமோ, இனி எவ்வாறு ஆகப்போகிறோமோ அதை அந்த லட்சியம்தான் நிர்ணயிக்கிறது. லட்சியத்தின் ஆற்றல் நம்மை ஒரு போர்வைபோல் மூடிக் கொண்டிருக்கிறது. நம் இன்பங்களிலும் துன்பங்களிலும், நாம் செய்யும் உயர்ந்த செயல்களிலும் தாழ்ந்த செயல்களிலும், நமது புண்ணியச் செயல்களிலும் பாவச் செயல்களிலும் நாம் அதன் ஆற்றலை அனுபவித்து வருகிறோம்.

மன ஒருமைப்பாட்டின் சக்தி

மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள முக்கிய வேற்றுமை மன ஒருமைப்பாட்டு

ஆற்றலே. செயலின் எந்தத் துறையிலும் வெற்றி என்பது இதைப் பொறுத்தே அமைகிறது. மன ஒருமைப்பாடு என்பதை நாம் அனைவரும் ஏதோ சிறிது அறிந்து தான் இருக்கிறோம். மன ஒருமைப் பாட்டின் விளைவுகளை நாம் அன்றாடம் சந்திக்கத்தான் செய்கிறோம். கலை, சங்கீதம் என்று எதுவானாலும் உயர்ந்த வெற்றி என்பது மன ஒருமைப்பாட்டினா லேயே கிடைக்கிறது.

மிருகங்களின் ஒருமைப்பாட்டு ஆற்றல் மிகவும் குறைந்தது. மிருகங் களுக்குப் பயிற்சி அளிப்பவர்களுக்கு ஓர் உண்மை தெளிவாகத் தெரியும். சொன் னதை அவை உடனே மறந்துவிடும். மிருகத்தினால் ஒரு பொருளின்மீது நீண்ட நேரம் மனத்தை வைத்திருக்க முடியாது. எனவே மனிதன் அதிக ஒருமைப்பாட்டு ஆற்றல் உள்ளவன் என்பதிலேயே மனிதனுக்கும் மிருகத்திற்கும் வேறுபாடு இருக்கிறது. இந்த ஒருமைப்பாட்டு ஆற்ற லின் வேறுபாடே மனிதர்களுக்கு இடை யில்கூட வேற்றுமையை ஏற்படுத்துகிறது.

மிகச் சாதாரண மனிதனையும், மிக மேலான மனிதனையும் ஒப்பிட்டுப் பாருங்கள்— ஒருமைப்பாட்டு அளவிலேயே வேறு பாடு, இது ஒன்றுதான் வித்தியாசம்.

ஒவ்வொருவரின் மனமும் ஏதோ சிலவேளைகளில் ஒருமுகப்படவே செய் கிறது. நாம் நேசிக்கும் பொருட்களில் நமது மனத்தை ஒருமுகப்படுத்துகிறோம்; நாம் மனத்தை ஒருமுகப்படுத்தும் பொருட்களை நேசிக்கிறோம். தனது அன்புக் குழந்தையின் பிஞ்சுமுகத்தை நேசிக்காத எந்தத் தாயாவது, உலகத்தில் இருக்கிறாளா? அவளுக்கு அந்த முகமே உலகின் மிக அழகிய முகம். அவள் குழந்தையை நேசிக்கிறாள். ஏனெனில் தனது மனத்தைக் குழந்தையில் ஒருமுகப் படுத்துகிறாள். ஒவ்வொருவரும் அந்த முகத்தில் மனத்தை ஒருமைப்படுத்த முடியுமானால் அனைவரும் அந்த முகத்தை நேசிப்பார்கள். அனைவருக்கும் அந்த முகமே மிக அழகிய முகமாகத் தோன்றும். நாம் நேசிக்கும் பொருட்களில் மனத்தை ஒருமுகப்படுத்துகிறோம்.

இத்தகைய மனஒருமைப்பாட்டில் உள்ள பிரச்சினை இதுதான்—நாம் மனத்தை அடக்குவதில்லை, மனம் நம்மை அடக்கி ஆள்கிறது. நமக்கு வெளியிலுள்ள ஏதோ ஒரு பொருள் நமது மனத்தைத் தன்னிடம் இழுத்து, அது விரும்பும் நேரம்வரை தன்னிடமே வைத்துக்கொள்கிறது. இனிய இசையைக் கேட்கிறோம், அழகிய படத்தைப் பார்க்கிறோம், நமது மனம் அங்கேயே நின்றுவிடுகிறது. நம்மால் அதை மீட்க முடிவதில்லை.

உங்களுக்குப் பிடித்த ஒரு தலைப்பில் நான் பேசினால் அதில் உங்கள் மனம் குவிகிறது. நான் உங்களை மீறி உங்கள் மனத்தை இழுத்து அந்தக் கருத்தில் பதியச் செய்கிறேன். இவ்வாறு நம்மையும் மீறி நமது கவனம் திசை திருப்பப்படுகிறது; பல பொருட்களில் நமது மனம் குவிக்கப் படுகிறது. நம்மால் இதைத் தவிர்க்க முடியாது.

இந்த மன ஒருமைப்பாட்டை வளர்க்க முடியுமா? அதற்கு நாம் எஜமானர்களாக

முடியுமா? இதுதான் கேள்வி. முடியும் என்கிறார்கள் யோகிகள். மனத்தை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தலாம் என்பது அவர்கள் கூற்று. நீதிநெறி நோக்கிலிருந்து பார்த்தால் இதில் ஓர் அபாயம் இருக்கிறது: மனத்தை ஒரு பொருளில் குவிக்கிறோம், ஆனால் நாம் விரும்பும்போது அதை விலக்க முடிவதில்லை. இந்த நிலை பெருந்துன்பங்களை உருவாக்குகிறது. இந்த விலக்கும் ஆற்றல் இல்லாததுதான் நமது பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம். எனவே குவிக்கும் ஆற்றலுடன் விலக்கும் ஆற்றலையும் நாம் வளர்க்க வேண்டும். அனைத்தையும் தவிர்த்து ஒன்றைப் பற்றும் திறன் வேண்டும்; ஒரு கணத்தில் மனத்தை அதிலிருந்து விலக்கி இன்னொன்றில் வைக்கவும் திறன் வேண்டும். இந்த இரண்டையும் சேர்த்து வளர்த்தோமானால் எந்த அபாயமும் இல்லை.

இதுவே மனத்தின் ஒழுங்கான வளர்ச்சி. என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் சாரம் மன ஒருமைப்பாடே

தவிர, தகவல்களைச் சேகரிப்பதல்ல. நான் மீண்டும் படிக்க நேர்ந்தால், ஒருபோதும் தகவல்களைச் சேகரிக்க மாட்டேன். முதலில் மன ஒருமைப்பாட்டையும் பற்றின்மையையும் வளர்த்துக்கொண்டு, பின்னர் அந்தப் பரிபூரணமான கருவியால் நான் விரும்பும்போது தகவல்களைச் சேகரித்துக் கொள்வேன். குழந்தையை வளர்க்கும்போது இந்த இரு ஆற்றல்களையும் அவர்களிடம் வளர்க்க வேண்டும்.

மனத்தின் ஆற்றல்களை எல்லாம் ஒருமுகப்படுத்தியதால்தானே உலகிலுள்ள அறிவை மனிதன் பெற்றான். எவ்வாறு தட்ட வேண்டும், தேவையான உந்துதலை எப்படி அளிப்பது என்பது மட்டும் நமக்குத் தெரியுமானால் உலகம் தனது ரகசியங்களை அளிக்கத் தயாராக இருக்கிறது. அதற்கான வலிமையும் வேகமும் ஒருமைப்பாட்டின்மூலமே கிடைக்கிறது. மனித மனத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை. எவ்வளவுக்கு அதை ஒருமைப் படுத்துவீர்களோ, அந்த அளவிற்கு

ஆற்றலை ஒரு மையத்தில் குவிக்க உங்களால் முடியும். இதுதான் ரகசியம்.

மனப்பயிற்சியில் சுவாசப் பயிற்சி முதற்படி. ஒழுங்கான சுவாசம் உடலைச் சீராக வைத்திருக்கிறது. அதன்மூலம் மனத்தை அடைவது மிக எளிது. சுவாசப் பயிற்சியில் முதலில் நாம் கவனிக்க வேண்டியது ஆசனம். எந்த நிலையில் ஒருவனால் வசதியாக உட்கார முடியுமோ அதுவே அவனுக்குரிய ஆசனம். முதுகெலும்பு சுதந்திரமாக இருக்க வேண்டும். உடலின் எடை விலாஎலும்புகளால் தாங்கப்பட வேண்டும். மனத்தை அடக்கக் குறுக்கு வழிகள் எதையும் முயலாதீர்கள். சாதாரண சுவாசப் பயிற்சி போதுமானது.

சமத்துவ உணர்வைப் பெறுதல்

யாரையும் பார்த்து இரக்கப் படாதீர்கள், எல்லோரையும் சமமாகப் பாருங்கள். சமத்துவமின்மை என்ற ஆதி பாவத்திலிருந்து உங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளுங்கள். நாம் எல்லோரும் சமம். 'நான் நல்லவன், நீ தீயவன், நான்

உன்னைத் தீமையிலிருந்து மீட்கப் போகிறேன்' என்று நினைக்காதீர்கள். சமத்துவமே சுதந்திரத்தின் அடையாளம். பாவிகளுடனும் குடிகாரர்களுடனும் ஏசுநாதர் வாழ்ந்தார். அவர் ஒருபோதும் தன்னை ஒரு பீடத்தின்மீது நிறுத்திக் கொள்ளவில்லை. பாவிகள்தான் பாவத்தைக் காண்பார்கள். மனிதனைப் பார்க்காதே, இறைவனை மட்டுமே பார்.

நாமே நமக்குச் சொர்க்கத்தை உருவாக்கிக் கொள்கிறோம். நரகத்தில் கூடச் சொர்க்கத்தை உருவாக்க நம்மால் முடியும். பாவிகள் நரகத்தில் மட்டுமே இருப்பார்கள். நாம் அவர்களைக் காண்கிறோம் என்றால் நாம் இங்கே நரகத்தில் இருப்பதாகத்தான் அர்த்தம்.

மனிதனுக்குக் கல்வி அவசியம். ஜனநாயகம், மனித சமத்துவம் என்றெல்லாம் இன்று பேசுகிறார்கள். தான் எல்லாருடனும் சமம் என்பதை ஒருவன் எப்படித் தெரிந்துகொள்வான்? அவனுக்கு வலுவான மூளை வேண்டும், அசட்டுக் கருத்துக்கள் இல்லாத தெளிந்த மனம்

வேண்டும், மனத்தை மூடியிருக்கும் மூட நம்பிக்கைகளை ஊடுருவி, தன்னுள் ஆழத்தில் உள்ள தனி உண்மையை அவன் அறிய வேண்டும். எல்லா நிறைவும் எல்லா சக்திகளும் ஏற்கனவே தன்னுள் உள்ளன, அவற்றைப் பிறர் தனக்குத் தரத் தேவையில்லை என்பதை அப்போது அவன் உணர்வான். இதை உணர்ந்த அந்தக் கணமே அவன் சுதந்திரன் ஆகிறான், சமத்துவம் பெறுகிறான். தன்னைப் போலவே எல்லோரும் பூரணர்களாகவே உள்ளனர், உடலாலோ உள்ளத்தாலோ தான் யார்மீதும் அதிகாரம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதையும் அவன் உணர்கிறான். தன்னைவிடக் கீழான நிலையில் யாரும் ஒருபோதும் இருந்ததில்லை என்பது அவனுக்குத் தெரிகிறது. அப்பொழுதுதான் அவன் சமத்துவத்தைப் பற்றிப் பேச முடியும், அதற்குமுன்பு அல்ல.

நாம் சுதந்திரமானவர்கள்

பிற உடல்களிலும் நீ இருப்பதை உணரக் கற்றுக்கொள். நாம் அனைவரும்

ஒன்றே என்பதைத் தெரிந்துகொள். மற்ற அறிவீனங்களை எல்லாம் காற்றில் பறக்கவிடு; நற்செயல், தீய செயல் ஆகிய வற்றைப் புறக்கணி. அவற்றை மீண்டும் ஒருபோதும் நினைக்காதே. நிகழ்ந்தது நிகழ்ந்ததுதான். மூட நம்பிக்கையை விடு. மரணமே எதிர்வந்தாலும் பலவீனம் அடையாதே.

நடந்ததை எண்ணி வருந்தாதே. கடந்ததை எண்ணிக் கலங்காதே. நீ செய்த நல்ல செயல்களையும் நினைவில் வைத்துக் கொள்ளாதே. சுதந்திரனாக இரு. பலவீனனாக, பயந்தவனாக, முட்டாளாக இருப்பவன் ஆன்மாவை அடைய முடி யாது. செய்த எதையும் இல்லாமல் ஆக்க முடியாது. அதன் பலனை அனுபவித்தே யாக வேண்டும். அதைத் துணிவுடன் எதிர்கொள். அதே செயலை மீண்டும் செய் யாமல் எச்சரிக்கையுடன் இரு. எல்லா செயல்களையும் இறைவனிடம் ஒப்படைத்துவிடு; நல்லது, தீயது இரண்டையும் சமர்ப்பித்துவிடு. நல்லதை வைத்துக் கொண்டு, தீயதை மட்டும்

ஒப்படைக்க எண்ணாதே. தனக்குத்தானே உதவி செய்து கொள்ளாதவர்களுக்கே இறைவன் உதவுவார்.

பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றுவிட்டால், உங்களுக்கு நன்மையோ தீமையோ எதுவும் இல்லை. நன்மை தீமை என்ற வேறுபாட்டை உருவாக்கு வதே சுயநலம்தான். இது புரிந்துகொள்ளச் சற்றுக் கடினமானது. ஆனால் நீங்களே அனுமதிக்காமல் பிரபஞ்சத்திலுள்ள எதற்கும் உங்கள்மீது ஆதிக்கம் செலுத்து வதற்கான ஆற்றல் இல்லை என்பதைக் காலப்போக்கில் நீங்கள் புரிந்து கொள்ளவே போகிறீர்கள். ஆன்மா ஒரு முட்டாளாகி, தன் சுதந்திரத்தை இழக்காத வரை எந்த ஆற்றலும் மனித ஆன்மாவை எதுவும் செய்ய முடியாது. பற்றின்மை என்பதன்மூலம் உலகின் மற்ற எதுவும் உங்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கவும் தவிர்க்கவும் செய்கிறீர்கள். நீங்கள் அனுமதிக்காதவரையில் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற உரிமை எதற்குமே கிடையாது என்று சொல்லிக்

கொண்டிருப்பது எளிது. ஆனால் தன்மீது எதையும் ஆதிக்கம் செலுத்தவிடாத மனிதனின் உண்மை அடையாளம் என்ன? புறவுலகம் அவன்மீது செயல்படுவதன் காரணமாக சுகமோ துக்கமோ அடையாத அவனது அடையாளம் என்ன? நல்லதோ, கெட்டதோ அவன் மனத்தில் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்தாது; எந்தச் சூழ்நிலையிலும் அவன் சமமாக இருப்பான்—இதுதான் அடையாளம்.

தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம் என்று இன்று நாம் நினைக்கும் பொருட்களெல்லாம் நாம் சமநோக்குப் பெற்ற பிறகு சிரிப்புக்கு உரியவை ஆகி விடும். இதையே முக்தி, சுதந்திரம் என்று வேதாந்தம் கூறுகிறது. சமத்துவ உணர்வும் சமநோக்கும் நம்மில் மேன்மேலும் மிகும் போது நாம் முக்தியை நெருங்குகிறோம் என்பதற்கான அடையாளம் அது. இன்பத்தையும் துன்பத்தையும், வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாகப் பார்க்கும் நிலை முதிரமுதிர, மனம் முக்திநிலையை நெருங்குகிறது என்பது பொருள்.

மனத்தைத் தன் விருப்பப்படி நரம்பு மையங்களுடன் இணைக்கவோ பிரிக்கவோ செய்வதில் வெற்றி பெறுபவன் பிரத்யாஹாரத்திலும் வெற்றி பெறுகிறான். பிரத்யாஹாரம் என்பது மனத்தின் ஆற்றல்களைப் புறத்தில் போகாமல் தடுத்து, புலன்களின் பிடியிலிருந்து அதனை விடுவித்து, 'உள்ளே குவித்தல்' ஆகும். இதைச் செய்ய முடிந்த பின்தான் நாம் உண்மையில் நற்குணம் என்பதைப் பெறுகிறோம், அதன்பின்தான் முக்திப் பாதையில் ஒரு நீண்ட அடியெடுத்து வைக்கிறோம். அதற்குமுன் நாம் வெறும் எந்திரங்களே.

முனிவர் விடுதலையை விரும்புகிறார். புலனின்பப் பொருட்கள் எல்லாம் வீண் என்பதும் சுக துக்கங்களுக்கு முடிவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். இந்த உலகத்துச் செல்வந்தர்களுள் எத்தனையோ பேர் பழைய இன்பங்களில் நிறைவின்றிப் புதுப்புது இன்பங்களைத் தேடித் திரிகின்றனர்! எல்லா இன்பங்களும் பழையவை ஆகிவிடுகின்றன.

அவர்களுக்குப் புது இன்பங்கள் தேவைப் படுகின்றன. ஒவ்வொரு நாளும் அவர்கள் எவ்வளவு முட்டாள்தனமானவற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இவை யெல்லாம் ஒரு கணநேரம் நரம்புகளைத் தட்டி எழுப்புகின்றன, அவ்வளவுதான். இந்தக் கணநேர எழுச்சிக்குப் பின் தோன்றும் பிரதிச்செயல் எவ்வளவு துன்பம் தருவது!

மக்களில் பெரும்பாலானோர் ஆட்டு மந்தைகளே. முதலில் போகும் ஆடு, குழி யில் தவறி விழுந்துவிட்டால், தொடர்ந்து செல்லும் ஆடுகளும் அதுபோலவே குழியில் விழுந்து கழுத்தை முறித்துக்கொள்ளும். அதுபோலவே மக்களும் சமுதாயத்தில் முக்கியமான ஒருவன் என்ன செய் கிறானோ அதையே பின்பற்றுகிறார்கள்; தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

உலக விஷயங்களின் வெறுமை புலப்படும்போது, இப்படி இயற்கையின் அடிமையாக, அது இழுத்த இழுப்பு

கெல்லாம் வளைந்து கொடுப்பது தவறு என்பதை மனிதன் உணர்கிறான்; இது வெறும் அடிமை வாழ்வு. ஒருவன் வந்து அவனிடம் ஓரிரு இனிய சொற்களைச் சொன்னால் புன்னகை புரிகிறான்; கடுஞ் சொற்களைச் சொல்லிவிட்டால் வருந்துகிறான். ஒரு வாய்ச் சோற்றுக்கும், ஒரு மூச்சளவு காற்றுக்கும், ஆடைகளுக்கும், தேசப்பற்றிற்கும், நாட்டிற்கும், பெயருக்கும், புகழுக்கும் அடிமையாக இருக்கிறான் மனிதன். இவ்வாறு அவன் அடிமைத்தனத்தில் சிக்குண்டு கிடக்கிறான். இந்தப் பற்றுக்களின் காரணமாக உண்மை மனிதன் உள்ளே புதைந்து கிடக்கிறான். வெறும் அடிமை உருவையே மனிதன் என்று நீங்கள் கூறுகிறீர்கள். தனது இந்த அடிமைத்தனத்தை மனிதன் உணரும் போது இதிலிருந்து விடுதலை பெறுவதற்குத் தீவிர ஆவல் எழுகிறது. செக்கச் சிவந்த நெருப்புத் தணல் ஒன்றை ஒருவனது தலையில் வைத்தால் அதைக் கீழே தள்ள அவன் எப்படிப் போராடுகிறான்! தான் இயற்கையின் அடிமை

என்பதை உண்மையாக உணர்ந்த மனிதனும் விடுதலை பெற, முக்தி பெற அவ்வளவு தீவிரமாகப் போராடுவான்.

முதலில் சுதந்திரராக இருங்கள். பின்னர் எத்தனை தனித்துவங்களை வேண்டுமானாலும் உங்கள் விருப்பம் போல் வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் நாம் மேடையில் தோன்றி பிச்சைக்காரன் வேடத்தில் நடிக்கும் நடிகனைப்போல் நடிப்போம். நடிப்புப் பிச்சைக்காரனையும் உண்மையிலேயே தெருவில் பிச்சை யெடுக்கும் பிச்சைக்காரனையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் காணுங்கள். ஒரு வேளை இருவரும் பார்வைக்கு ஒன்று போல் தானிருப்பார்கள். பேச்சு வார்த்தை களும் ஒன்றுபோலவே உள்ளன. ஆனா லும் எத்தனை வேறுபாடு! ஒருவன் பிச்சை எடுப்பதன்மூலம் ஆனந்தத்தை அனுபவிக் கிறான், மற்றொருவன் துன்பமும் துயர மும் அடைகிறான். எது இந்த வேறு பாட்டை ஏற்படுத்துகிறது? ஒருவன் சுதந்திரன், மற்றவன் கட்டுண்டவன். தன் வறுமை உண்மையல்ல, தான் நாடகத்

திற்காகத் தரித்துள்ள வேடம் அது என்பதை நடிகன் உணர்ந்திருக்கிறான். உண்மைப் பிச்சைக்காரனோ தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிச்சையெடுப்பதே தனது நிலை, தான் பிச்சையெடுத்தே தீர வேண்டும் என்று எண்ணுகிறான். இதுதான் நியதி. நமது உண்மை இயல்பை அறியாததுவரை, இயற்கைச் சக்திகள் ஒவ்வொன்றாலும் முன்னும் பின்னும் அலைக்கழிக்கப்பட்டு இயற்கையிலுள்ள எல்லாவற்றிற்கும் அடிமைகளாக இருக்கும் பிச்சைக்காரர் களே நாம். உதவி வேண்டி நாம் உலகம் முழுவதும் கதறுகிறோம், உதவி கிடைப் பதில்லை. கற்பனைக் கடவுள்களை நோக்கி அழுகிறோம், உதவி கிட்டுவ தில்லை. ஆனாலும் உதவி வரும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம். இப்படிக் கதறி அழுவதும் நம்பிக் காத்திருப்பதுமாக ஒரு வாழ்க்கை முழுவதும் வீணாகிறது. இதே நாடகம் தொடர்ந்து நடைபெறு கிறது.

வீறு நடை போடு

இதனை உண்மையாகவே கற்க விரும்புபவர்கள் உங்களில் யாராவது இருந்தால், அவர் வாழ்க்கையில் மற்ற தொழில்களில் செலுத்தும் அளவு மன உறுதியுடன், ஏன், அதைவிடத் தீவிர உறுதியுடன் தொடங்க வேண்டும். ஒரு தொழிலுக்கு எவ்வளவு கவனம் தேவைப்படுகிறது! அது எவ்வளவு கண்டிப்பாக வேலை வாங்குகிறது! தந்தையோ, தாயோ, மனைவியோ, குழந்தையோ இறப்பதானாலும், தொழில் நிற்க முடியுமா! இதயம் உடைந்து போயிருந்தாலும், தொழில் செய்யும் ஒவ்வொரு மணி நேரமும் தாங்க முடியாத வேதனை தரும்போதும், நாம் தொழில் நடக்கும் இடத்திற்குச் சென்றே தீர வேண்டும். அது நியாயமானது, அது சரி என்றுதானே நாம் கருதுகிறோம். எந்தத் தொழிலுக்கும் எக்காலத்திலும் தேவை யாக இருப்பதைவிட அதிக உழைப்பு இந்தச் சாஸ்திரத்திற்குத் தேவை. தொழிலில் பலர் வெற்றி பெறலாம்;

இதிலோ மிகமிகச் சிலரே வெற்றி பெறு வர். ஏனெனில் கற்பவரின் தனியியல்பு இதில் ஒரு முக்கியக் காரணம். தொழிலில் எல்லோரும் பணம் குவிக்காமல் இருந்தா லும் ஒவ்வொருவரும் ஏதோ சேர்க்க முடியும். அதுபோல் இதைக் கற்பவர்களுக் கும் ஒரு கணமாவது காட்சி கிடைக்கும். அதனால் இதன் உண்மையைப் பற்றியும் இதனை முழுவதும் உணர்ந்த மனிதர்கள் இருந்தனர் என்பதைப் பற்றியும் அவர் களுக்கு உறுதியான தீர்மானம் உண்டாகும்.

சிறு அளவில் ஆனாலும் சிரத்தை யுடன் செய்தால், அது அற்புதமான பலன் களை அளிக்கும். ஆதலால் ஒவ்வொரு வரும் தங்களால் இயன்ற அளவு சிறிதே னும் முயற்சி செய்யட்டும். மீனவன் தன்னை ஆன்மாவென நினைத்தால், சிறந்த மீனவன் ஆவான். மாணவன் தன்னை ஆன்மாவென நினைத்தால், சிறந்த மாணவன் ஆவான். வக்கீல் தன்னை ஆன்மாவென நினைத்தால் சிறந்த வக்கீலாவான். இவ்விதமே எல்லோரும்.

மகாவீரனைப்போல் முன்னேறு! அங்கும்இங்கும் பார்க்காதே! இந்த உடம்பு தான் எத்தனை நாளைக்கு! சுகதுக்கங்கள் தாம் எத்தனை நாளைக்கு! நீ மனித உடலைப் பெற்றிருக்கிறாய், உனக்குள் இருக்கும் ஆன்மாவை விழித்தெழச் செய். ''நான் பயமற்ற நிலையை அடைந்து விட்டேன்'' என்று சொல். ''நான் ஆன்மா. அதில் என் அகந்தை எல்லாம் கரைந்து விட்டது'' என்று சொல். இந்த வழியில் நிறைநிலையை அடை. அதன்பிறகு, உன் உடம்பு நிலைத்திருக்கும்வரை ''நீ அதுவாக இருக்கிறாய்'', ''எழுந்திரு, விழித்திரு. லட்சியத்தை அடையும்வரை நில்லாமல் செல்'' என்று அச்சத்தை உதறித் தள்ளுவதற்கான போதனைகளை உபதேசி.